Registered as a Newspaper


# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 12 வள்ளுவர் ஆண்டு 2028 புரட்டாதி 7 செவ்வாய்க்கிழமை (23-9-1997) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 284


# கல்முனையில் பதற்ற நிலை

# ஊரடங்கு உடனே அமுல்!

## முஸ்லிம் ஊர்காவலர் சுடப்பட்டதை அடுத்து

மட்டக்களப்பு, செப்ரெம்பர் 23

அம்பாறை மாவட்டம் கல்முனையில் நேற்றுக்காலை 6.45 மணிக்கு முஸ்லிம் ஊர்காவலர் ஒருவர் இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டதை அடுத்து, அங்கு உடனடியாக ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

கல்முனையில் நேற்றுப் பதற்றம் நிலவிய போதிலும் பெரிய அசம்பாவிதங்கள் ஏதும் இடம்பெறவில்லை என அங்கிருந்து நேற்று முன்னிரவு கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

தமது வீட்டிலிருந்து சைக்கிளில் கல்முனைப் பொலீஸ் நிலையத்தைநோக்கிச்சென்று கொண்டிருந்த அகம்மது லெப்பை முகம்மது பஸாகீர் (வயது 24) என்ற ஊர்காவலரே கல்முனைக்குடி என்ற

[8 ஆம் பக்கம் பார்க்க]

## பத்மநாதனின் மனு மீது வியாழனன்று விசாரணை

கொழும்பு, செப். 23

முன்னாள் யாழ். மாவட்ட அரச அதிபர் எஸ். பத்மநாதனின் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனு மீதான விசாரணை எதிர்வரும் வியாழக்கிழமை உயர் நீதிமன்றத்தில் ஆரம்பமாகும்.

உயர் நீதிமன்றத்தில் இந்த மனு நேற்று எடுத்துக்கொள்ளப்பட்ட போது நீதிமன்றம் இவ்வாறு தீர்மானித்தது.

பத்மநாதன் கைது செய்யப்பட்டிருப்பது சட்டவிரோதமானது என்று தெரிவித்தும்—

அவரை விடுதலை செய்யுமாறுஉத்தரவிடக்கோரியும்—

அவரின் சார்பில் இந்த அடிப்படை மனித உரிமை மீறல் மனு தாக்கல் செய்யப்பட்டிருப்பது தெரிந்ததே.

நீதியரசர்கள் மார்க் பெர்னாண்டோ, ஷிராணி பண்டாரநாயக்கா ஆகியோர் முன்னிலையில் இந்த மனு நேற்று எடுத்துக் கொள்ளப் பட்டபோது விசாரணைக்கான தினம் தீர்மானிக்கப் பட்டது.

(8 ஆம் பக்கம் பார்க்க)

## மது விற்பனைத் தடை மட்டக்களப்பில் நீக்கம்

மட்டக்களப்பு, செப். 23

மட்டக்களப்பு மாவட்டத்தில் மது விற்பனை செய்வதற்கு விதிக்கப்பட்டிருந்த தடையை மதுவரித் திணைக்களம் நேற்று முதல் நீக்கியுள்ளது.

அண்மையில் கலப்படம் செய்யப்பட்ட சாராயத்தை அருந்திய நூற்றுக்கு மேற்பட்டோர் மட்டக்களப்பின் பல பகுதிகளிலும் உயிரிழந்ததை அடுத்து இத்தடை விதிக்கப்பட்டது. தெரிந்ததே.

இச் சம்பவம் தொடர்பாக அங்குள்ள எட்டு மதுக்கடைகள் பொலீஸாரால் மூடி 'சீல்' வைக்கப்பட்டன. அவற்றின் உரிமையாளர்கள் நால்வர் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டனர்.

[8 ஆம் பக்கம் பார்க்க]

## வன்னிச் சண்டைகளில் புலிகளின் சிறுத்தை படையணி

கொழும்பு, செப். 23

விடுதலைப் புலிகள் இயக்கத்தில் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள புதிய படைப்பிரிவுக்கு ''சிறுத்தைப் படையணி'' என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது.

வன்னிப் பகுதியில் சமீபகாலமாகப் புலிகள் நடத்திய தரைச் சண்டைகளிலும், கடற் சமர்களிலும் சிறப்பாகச் செயற்பட்ட உறுப்பினர்களில் ஒரு பகுதியினரையும், விசேட கொமாண்டோ பயிற்சி பெற்ற உறுப்பினர்களையும் கொண்டு இப்படைப் பிரிவு அமைக்கப்பட்டுள்ளது.

சிறுத்தைப் படையணிக்கு தனியான சீருடைகளும் வழங்கப்பட்டுள்ளன, கடலிலும், தரையிலும் சண்டையில் ஈடுபடக்கூடிய வகையில் தீவிர பயிற்சியும் அளிக்கப்பட்டுள்ளது.

சிறுத்தைப் படையணியில் ''கடற் சிறுத்தைகள்'' என்ற தனியான ஓர் அணியும் உள்ளது.

புல்மோட்டையில் சீனக் கப்பல் மீது நடத்தப்பட்ட தாக்குதலிலும் கடற் சமரிலும் கடற்புலிகளுடன் சிறுத்தைப்படையணியும் பங்குபற்றியதாகப் பாதுகாப்புச் செய்தி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ஐ)

# தீர்வுத் திட்டத்துக்கு 30 அமைச்சர்களும் ஆதரவு

## கூட்டாக விரைவில் அறிக்கை வெளியிடுவர்

கொழும்பு, செப். 23

அதிகாரப் பரவலாக்கல் விவகாரம் குறித்து இறுதித் தீர்மானம் எடுப்பதற்காக அமைச்சரவை விசேடமாக எதிர்வரும் திங்களன்று (29 ஆம் திகதி) கூடியதன் பின்னர் —

அரசின் தீர்வு யோசனைகளுக்கு ஏகோபித்த ஆதரவைத் தெரிவித்து முப்பது அமைச்சர்களும் அறிக்கை வெளியிடுவர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதற்கிடையில் —

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் அரசில் அங்கம் வகிக்கும் தோழமைக் கட்சிகளின் நாடாளுமன்றக் குழுக்களின் கூட்டங்களைக் கூட்டச் செய்யவும் —

அதிகாரப் பரவலாக்கல் யோசனைகளுக்கு ஏகோபித்த ஆதரவைத் தெரிவிக்கும் அறிக்கைகளை அந்தக் கூட்டங்களின் மூலம் வெளியிட வைப்பதற்கும் சில முயற்சிகள் எடுக்கப்பட்டிருப்பதாகத் தெரிகின்றது.

அரசாங்க நாடாளுமன்ற உறுப்பினர்கள் எவரும் அரசின் முயற்சிக்கு குழப்பம் விளைவிக்கமாட்டார்கள் என்றும் அரச வட்டாரங்கள் நம்பிக்கை வெளியிட்டன. (உ-3-150)

## விடுமுறையில் வீடு சென்ற பொலீஸாரிடம் ஆயுதங்கள்

விடுமுறையில் வீடு செல்லும்போது ரீ 56 ரக துப்பாக்கி மற்றும் ரவைகள், கைக்குண்டுகள் என்பனவற்றை தம்முடன் எடுத்துச் சென்றதாகச் சந்தேகிக்கப்படும் பொலீஸார் இருவரை பேருவலை பொலீஸார் விசாரணைக்குட்படுத்தியுள்ளனர்.

வவுனியாவில் கடமையாற்றும் இவ்விரு பொலீஸாரும் தம்முடன் எடுத்துச்சென்ற இந்த ஆயுதங்களை பேருவலைப் பொலீஸார் மீட்டுள்ளனர். (ஐ-6)

## பொ. ஐ. முன்னணி -- ஐ. தே. கட்சி

## தீர்வுத் திட்டத்தை ஆதரிக்க இரு தரப்புக்கும் வற்புறுத்து

### சில வெளிநாடுகள் விடுத்துள்ளன

அதிகாரப் பரவலாக்கல் யோசனைகளை இணைந்து நிறைவேற்றுமாறு பொதுமக்கள் ஐக்கிய முன்னணிக்கும், ஐ. தே. கவுக்கும் சில நாடுகள் அறிவுறுத்தியுள்ளன என்று கொழும்பு பத்திரிகை செய்திகள் தெரிவிக்கின்றன.

பேரினவாதிகளின் எதிர்ப் [illegible] பும் ஒன்றாகச் செயற்பட வேண்டும் என்று அந்த நாடுகள் இருகட்சிகளையும் கேட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில்—

அதிகாரப் பரவலாக்கல் யோசனைக்கு எதிராக தமது பிரசார நடவடிக்கைகளை சில சிங்களத் தீவிரவாதக் கட்சிகளும் சிங்கள ஆணைக்குழுவும் முடுக்கிவிட்டிருப்பதாக மற்றொரு தகவல் தெரிவித்தது. (உ-3-150)

## செய்திச் சாரம்

### ஜீப் மீது கிரனேட் வீச்சு

கொழும்பு, செப். 23

மட்டக்களப்பிலிருந்து கல்லடிக்குச் சென்று கொண்டிருந்த ஜீப் ஒன்றின் மீது புலிகள் கைக்குண்டு வீசியதாகவும் —

ஆனால் படையினருக்கு உயிரிழப்பு ஏதும் ஏற்படவில்லை எனவும் —

கொழும்புச் செய்தி வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-ஐ)

### மர வியாபாரி சுட்டுக்கொலை

மட்டக்களப்பு, செப். 23

மட்டக்களப்பு வாழைச்சேனை களத்துமுனை என்ற இடத்தில் கடந்த ஞாயிறு இரவு 7 மணியளவில் அப்துல் ஹமீட் (வயது 27) என்ற முஸ்லிம் மர வியாபாரி தனது வீட்டில் வைத்து இனம்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டார். (உ-21)

### வானொலிக் கருவி மீட்பு

[illegible] மட்டுவில் பகுதியில் தேடுதல் நடத்திய படையினர் ஆள்கள் இல்லாத வீடு ஒன்றில் இருந்து வானொலித் தொடர்பு அன்ரனாவையும், அதற்குரிய மற்றும் சில உபகரணங்களையும் மீட்டுள்ளதாகப் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

படையினர் பயன்படுத்தும் சீருடையை ஒத்த ஒரு தொகுதி சீருடைகளும் அந்த வீட்டில் இருந்து மீட்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-6)

### மாணவன் பலி!

மட்டக்களப்பு, வாழைச்சேனை வீதியில் உள்ள கும்புறுமூலை இராணுவ முகாமிலிருந்து நேற்று முன்னிரவு 7-30 மணியளவில் தீர்க்கப்பட்ட வேட்டினால் கே. புஷ்பகாந்தன் (வயது 8) என்ற மாணவன் பலியானான். (உ-21)

### மிதிவெடிகளில் சிக்கும் படையினர்

வாழைச்சேனைப் பகுதியில் விடுதலைப் புலிகளின் 'ஜொனி' மிதி வெடிகளில் படையினர் சிக்கும் சம்பவங்கள் அடிக்கடி இடம் பெறுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கோரகல்லிமடுப் பகுதிக்குச் சென்று வரும் கிரானைச் சேர்ந்தபடையினரை இலக்கு வைத்தே இந்த மிதி வெடிகள் புதைக்கப்படுவதாக புலனாய்வுத் தகவல்கள் மூலம் தெரியவந்திருப்பதாக படையினர் தெரிவித்துள்ளனர்.

### தாக்குதல்

மட்டக்களப்பில் உள்ள பொலீஸ் காவல் அரண் ஒன்றின் மீது கடந்த ஞாயிறு இரவு சிறிய ரக ஆயுதங்களைக் கொண்டு புலிகள் தாக்குதல் நடத்தினர்.

பொலீஸாருக்கு இழப்பு ஏதும் ஏற்படவில்லை என்று கொழும்பில் அறிவிக்கப்பட்டது. (உ-9)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## சிதம்பரப்பிள்ளை நடராசா

நீர்வேலி வடக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட ஓய்வுபெற்ற இலங்கை வங்கி சிறாப்பர் சிதம்பரப்பிள்ளை நடராசா 21-09-97 இல் காலமானார்.

அன்னார் மீனாட்சிஅம்மாவின் அன்புக்கணவரும், நித்தியா (லண்டன்), கஜேந்திரன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சசிக்கந்தராசா (லண்டன்), ஆனந்தி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், பவன், ஆரணி, அர்ச்சுனா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
மனைவி

(49798)

## செல்லையா காராளசிங்கம்

(ஓய்வுபெற்ற சுழிபுரம் தபால் ஊழியர்)

செட்டிகுறிச்சியைச் சேர்ந்தவரும் தற்போது அரசடி றோட், வடலியடைப்பில் வசிப்பவருமான செல்லையா காராளசிங்கம் 21 - 9 - 97 அன்று காலமானார். இவர் ஜெகதீஸ்வரியின் அன்புக் கணவரும், கதிரைமலைச்செல்வனின் (றூபன் — புத்தளம்) அன்புத் தந்தையும், காலஞ்சென்ற வைத்திலிங்கம், சுந்தரியின் சகோதரரும், மாணிக்கத்தின் (ஓய்வுபெற்ற தபால் ஊழியர்) பெறாமகனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 22 - 9 - 97 அன்று வடலியடைப்பில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
திருமதி கா. ஜெகதீஸ்வரி
(மனைவி)

அரசடி வீதி,
வடலியடைப்பு.

(சி/1612)

## ஐயாத்துரை சின்னம்மா

கரவெட்டி கிழக்கு தெடுத்தனை யார்க்கருவைச் சேர்ந்த ஐயாத்துரை சின்னம்மா 21-09-97 ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

இவர் காலஞ் சென்ற ஐயாத்துரையின் அன்பு மனைவியும், மார்க்கண்டு, தங்கமுத்து, கணேசு, இரத்தினம், மாணிக்கம், சரசுவதி, பாக்கியம், மகேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும், சின்னமணி, கனகசபை, செல்லம்மா, தங்கம்மா, காலஞ்சென்ற நல்லதம்பி மற்றும் தங்கராசா, பூபாலபிள்ளை, கந்தவனம் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று (22-9-97) திங்கட்கிழமை கரவெட்டி கிழக்கில் நடைபெற்றன.

தகவல்;
யார்க்கரு கணேஸ்
(மகன்)
க. முகுந்தன்
(பேரன்)

தெடுத்தனை,
கரவெட்டி கிழக்கு.
[49799]

## வைத்திலிங்கம் அரியரட்னம்

நவாலியைப்பிறப்பிடமாகவும்அவுஸ்திரேலியாவை வசிப்பிடமாகவும் கொண்ட ஓய்வுபெற்ற தபாலதிபர் வைத்திலிங்கம் அரியரட்னம் 12-09-97 அன்று காலமாகிவிட்டார்.

இவர் கிருபாம்பிகையின் அன்புக் கணவரும், றஞ்சினி, மாலினி (அவுஸ்திரேலியா), விஜயகுமார் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தந்தையும், குலேந்திரன், கோணேஸ்வரன் (அவுஸ்திரேலியா), சிறீகாந்தி (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்பு மாமனாரும், மயூரன், ருக்மன், ரெங்கன் ஆகியோரின் பேரனுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 18-09-97 அன்று நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

தகவல்:
S. குலேந்திரன்

நவாலி தெற்கு,
மானிப்பாய்,

(49798)

## செல்வி சுப்பிரமணியம் தங்கம்மா

(இணுவில் மக்லியொட் வைத்தியசாலை, தெல்லிப் பழை கூட்டுறவு வைத்தியசாலை)

உடுவில் கிழக்கைப் பிறப்பிடமாகக் கொண்ட சுப்பிரமணியம் தங்கம்மா 22-09-97இல் காலமானார்.

இவர் சுப்பிரமணியம்- ஆச்சிமுத்து தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ் சென்றவர்களான திருமதி காராளபிள்ளை நல்லம்மா, செல்வி சு. பொன்னம்மா, செல்வி சு. அன்னபூரணம், செல்வி சு. முத்துப்பிள்ளை, மற்றும் திருமதி வேலும்மயிலும் பாக்கியம் ஆகியோரின்சகோதரியும், காராளபிள்ளை அரியரெத்தினராஜா, வேலும்மயிலும் ராஜ்மோகன் ஆகியோரின் பெறாமகளும், அரியரெத்தினராஜா மல்லிகாவின் மருமகளும், திருமதி பிலிப் துஷிந்தாவின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23-09-97) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2-30 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் இணுவில் பூவோடை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
திருமதி வேலும் மயிலும் பாக்கியம்
(சகோதரி)

மருதனாமடம்,
சுன்னாகம்.

(50051)

## சமய சந்நிதியில்

யாழ்ப்பாணம் றக்கா வீதியில்உள்ள புனிததிரேசம்மாள் ஆலய 100 ஆம் ஆண்டு திருவிழாகடந்த வெள்ளிக்கிழமை முதல் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது. எதிர்வரும் 27ஆம் திகதி சனிக்கிழமை நற்கருணை விழாவும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை திரேசம்மாள் பெருவிழாவும் நடைபெறும். யாழ். ஆயர் மகா வந். தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை தலைமையில் கூட்டுத் திருப் பலியும் இடம்பெறும். (ஐ-9)

## புழுதி நெல் விதைப்பு

மானிப்பாய், செப். 23

மானிப்பாய் தெற்கு, மானிப்பாய் மேற்கு கிராய்க் குளப் பகுதி, சங்கரத்தைப் பகுதி ஆகிய இடங்களில் புழுதி நெல்விதைப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

பயன்தர நீண்ட கால மெடுக்கும் நெல்லின விதைகளே இப்போது விதைக்கப்பட்டு வருகின்றன.

(இ-90)

## சிரமதானம்

நெல்லியடி, செப்.23

வல்லிபுர ஆழ்வார் ஆலய வருடாந்த உற்சவத்தை முன்னிட்டு, ஆலய சுற்றாடல் சிரமதானம் மூலம் எதிர்வரும் வியாழக்கிழமை துப்புரவு செய்யப்படவிருக்கிறது.

சூழல் பாதுகாப்பு வாரத்தை முன்னிட்டு பருத்தித்துறை நகாசபையின் முன்னேற்பாட்டில் உள்ளூராட்சி மன்ற ஊழியர்கள் ஒன்றிணைந்து இந்த சிரமதானத்தை மேற்கொள்கின்றனர். (இ-109)


மற்றுமோர்
புதிய வெளியீடு!

ராம்கி, சங்கவி
நடித்த
ஆஹா என்ன
பொருத்தம்

வீடியோ விமல்
யாழ்ப்பாணம்.

(சி/1619)


### யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்

### கலைப்பீடம் 1996/97 கல்வியாண்டு முதலாண்டு மாணவர்களுக்கு

மேற்படி மாணவர்களுக்கான கலைப்பீட வரவேற்புக் கூட்டம் 01-10-1997 புதன்கிழமை காலை10.30 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் நடைபெறும். அனைத்து முதலாண்டு மாணவர்களும் இக்கூட்டத்தில் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர்.

- பதிவாளர்

யாழ்ப்பாணப்
பல்கலைக் கழகம்.

## சீருடை கிடைக்கவில்லை

வலிகாமம் தெற்கு, செப். 23

குடாநாட்டில் ஐந்தாம் ஆண்டுக்குக்கீழ் கல்வி பயிலும் மாணவிகளுக்கான சீருடைகள் பல கோட்டப்பாடசாலைகளுக்கு இவ்வருடம் இன்னமும் வழங்கப்படவில்லை.

இவ் வருடத்துக்கான பாடசாலை மாணவர் சீருடைகள் கடந்த மே மாதத்தில் வழங்கப்பட்ட போதிலும் ஐந்தாம் ஆண்டுக்கு உட்பட்ட மாணவிகளுக்கான சீருடைகள் வழங்கப்படவில்லை.

தெல்லிப்பழை, சண்டிலிப்பாய் கோட்டங்களை சேர்ந்த பாடசாலை மாணவிகளுக்கும், கோப்பாய் கோட்டப் பாடசாலைகள் சிலவற்றுக்குமான மேற்படி சீருடைகள் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள போதிலும் ஏனைய கோட்டங்களைச் சேர்ந்த பாடசாலை மாணவர்களுக்கு இதுவரையிலும் சீருடைகள் கிடைக்கவில்லை. (இ-152)

## கலந்துரையாடல்

உணவு விவசாயப் பிரதிநிதிகளுடனான கலந்துரையாடல் ஒன்று நாளை புதன் கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ். செயலகத்தில் நடைபெறவுள்ளது. சகல பிரதேச செயலர்களையும், உதவி அரசாங்க அதிபர்களையும் அதில் கலந்து கொள்ளுமாறு மேலதிக அரச அதிபர் து. வைத்திலிங்கம் கேட்டுள்ளார். (ஐ)

## தமிழ் மீனவர் சுட்டுக் கொலை

கொழும்பு, செப். 23

மட்டக்களப்பு — பொலன்னறுவை எல்லைப் பகுதியில் ஆற்றில் மீன்பிடித்துக்கொண்டிருந்த தமிழ் மீனவர்கள் மீது கடற்படையினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் சுப்பிரமணியம் சுந்தரலிங்கம் (வயது 38) என்னும் மீனவர் பலியானதாக ஏஜென்ஸி செய்தி ஒன்று தெரிவித்தது.

இளையதம்பி செல்லத்துரை, இளையதம்பி சீனித்தம்பி ஆகிய இரு மீனவர்கள் கடற்படையினரால் கைது செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-9)


தெல்லிப்பளை
பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
(வரையறுக்கப்பட்டது)

என்ஜின் தேவை

(TATA 42 - 1210 S E மொடல்)

எமது சங்கத்திற்குச் சொந்தமான பென்ஸ் 5 தொன் எடையுடைய 24-9878 லொறிக்கு 42-1210 எஸ். இ. மொடல் இயந்திரம் கியர் பொக்ஸ் உட்பட தேவைப்படுகின்றது. வைத்திருப்போர் சகல விவரங்களுடனும், கேள்வித் தொகையுடனும் 30.09.97 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு. ப. 10 மணிக்கு முன்னதாக பொதுமுகாமையாளருடன் நேரடியாகத் தொடர்பு கொள்ளவும். அல்லது சகல விவரங்களையும் பதிவுத்தபாலில் அனுப்பிவைக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

பொதுமுகாமையாளர்,
தெல்லிப்பளை ப. நோ. கூ. சங்கம்.

1997-09-23 (சி/1617)


# மரண அறிவித்தல்

## இளையதம்பி வல்லிபுரம் (மணியம்)

(முன்னாள் இலிகிதர்
ஸ்ரீ சோமஸ்கந்தாக் கல்லூரி, புத்தூர்)

இராமர் வளவு முத்துக்கிருஷ்ணர் லேன் சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் அம்பலவாணர் வீதி உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட இளையதம்பி வல்லிபுரம் 22 - 09 - 97 திங்கட்கிழமை காலமானார்.

இவர் இளையதம்பி—தங்கம் தம்பதிகளின் அன்பு மகனும், காமாட்சிப்பிள்ளையின் அன்புக் கணவரும், திருச்செல்வம் (ஆசிரியர், மயிலணி சைவ மகா வித்தியாலயம், சுன்னாகம்), நித்தியானந்தன் (மருந்தாளர், யாழ். போதனா வைத்தியசாலை), காலஞ்சென்ற ஜெகதீசன் (முன்னாள் பொறியியலாளர், உர ஆக்கக் கூட்டுத்தாபனம், லங்கா சீமெந்துக் கூட்டுத்தாபனம்), மற்றும் திருமதி அருந்ததிநாயகி நாகேந்திரா (மருந்தாளர், யாழ். போதனா வைத்தியசாலை), திருமதி விமலாதேவி ஜெகநாதன் (மருந்தாளர், மாவட்ட வைத்தியசாலை, தெல்லிப்பழை), திருமதி கமலாதேவி மகாதேவன், ஸ்ரீ காந்தன் (தொலைபேசித் திணைக்களம், லண்டன்), கையிலைநாதன் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், திருமதி நவரத்தினதேவி திருச்செல்வம் (ஆசிரியர், கரணவாய் மகா வித்தியாலயம்), திருமதி வரலட்சுமி நித்தியானந்தன், நாகேந்திரா (தொழில் நுட்ப உத்தியோகத்தர், கல்வித் திணைக்களம், யாழ்ப்பாணம்), ஜெகநாதன் (ஆசிரியர், மானிப்பாய் இந்துக் கல்லூரி, மகாதேவன் வசுமதி (லண்டன்), சுமதி (லண்டன் — முன்னாள் ஆசிரியர், யாழ் மத்திய கல்லூரி) ஆகியோரினதும் அன்பு மாமனாரும், ஜனாத்தனன் (A/L மாணவன், கொக்குவில் இந்துக் கல்லூரி), துஷியந்தன் (மாணவன், யாழ் இந்துக் கல்லூரி, ஆண்டு 10), சுதர்சினி (வேம்படி மகளிர் கல்லூரி, ஆண்டு 7 ), பிரகாசினி, சுகன்யா (மாணவிகள் யா/இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை), ஜெகலக்ஸ்ஷயன் (லண்டன்) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 23 09-97 செவ்வாய்க்கிழமை பி. ப. 2. 00 மணிக்கு உடுவிலில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வ. நித்தியானந்தன்
(மகன்)

''காமாட்சி இல்லம்''
அம்பலவாண வீதி,
உடுவில் கிழக்கு,
சுன்னாகம்.

(50052)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராமோஸ் பதவி நீடிப்பு முயற்சியை எதிர்த்துப் பிலிப்பீன்ஸில் பேரணி!

## 16 லட்சம் மக்கள் கலந்து கொண்டனர்

மணிலா, செப். 23

பிலிப்பீன்ஸ் அதிபர் பிடல் ராமோஸ் பதவியில் நீடிக்கும் முயற்சியை எதிர்த்து நேற்று முன்தினம் தலைநகர் மணிலாவிலும் பிலிப்பீன்ஸின் வேறு எட்டு மாநிலங்களின் தலைநகரங்களிலும் ஆர்ப்பாட்டப் பேரணிகள் நடைபெற்றன.

சுமார் 16 லட்சம் மக்கள் இந்த ஆர்ப்பாட்டப் பேரணிகளில் கலந்து கொண்டனர்.

முன்னாள் அதிபர் காலஞ்சென்ற பேர்டினண்ட் மார்க்கோஸ் பிலிப்பீன்ஸில் இராணுவ ஆட்சியை அமுல் செய்த 25 ஆண்டு நிறைவு நாளையொட்டி இந்த பேரணிகள் ஏற்பாடு செய்யப்பட்டன.

அதிபர் ராமோஸ் தொடர்ந்து பதவியில் இருப்பதற்காக பிலிப்பீன்ஸில் அரசமைப்பை மாற்ற நடவடிக்கை எடுத்து வருகிறார் என்று தெரிவிக்கப்படுகிறது.

மணிலா நகரில் நடை பெற்ற பேரணி, கத்தோலிக்க திருச்சபைத் தலைவர் கருலாஸ் ஐமேசென் தலைமையிலும், முன்னாள் அதிபர் அக்கினோ தலைமையிலும் வழிபாடுகளுடன் ஆரம்பமானது.

மக்களின் விருப்பத்தை மதித்து தாம் இரண்டாம் தவணை பதவியை நாடப் போவதில்லை எனவும் தற்பொழுது எஞ்சி உள்ள தமது எட்டு மாத ஆட்சிக்காலத்தில் அரசமைப்பில் திருத்தம் செய்யப் போவதில்லை எனவும் கடந்த சனிக்கிழமை ராமோஸ் அறிக்கை வெளியிட்டிருந்தார்.

எனினும் ஞாயிறன்று இடம்பெற்ற பேரணி அதிபர் தமது உறுதி மொழியை மறந்து விடக் கூடாது என எச்சரிப்பதற்காகவே நடத்தப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. (இ-9)

## நிமிடத்துக்கு 10 லட்சம் வேட்டுக்கள்!

வாஷிங்டன், செப். 23

ஒரு நிமிடத்தில் 10 லட்சம் வேட்டுக்களை தீர்க்கக்கூடிய துப்பாக்கி ஒன்றை அமெரிக்க இராணுவ வல்லுநர்கள் பரிசீலித்து வருகின்றனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

51 வயதான ஆஸ்திரேலியரான மைக்கோ யுவயர் என்பவர் இத்துப்பாக்கியைக் கண்டுபிடித்திருப்பதாக லண்டன் ''சன்டே ரைம்ஸ்' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. (இ-3)

## ஆர்ப்பாட்டக்காரர்கள் பொலீஸாருடன் மோதல்

### பங்களாதேஷில் 50 பேர் காயம்

பங்களாதேஷ் தலைநகர் டாக்காவில் அரசின் தடை உத்தரவையும் மீறி பேரணி ஒன்றுக்காக கூடியிருந்த எதிர்க்கட்சி ஆதரவாளர்களுடன் கலகம் அடக்கும் பொலீஸார் மோதினர்.

இந்தப் பேரணியை கலைந்து போகச் செய்வதற்கு பொலீஸார் கண்ணீர்ப் புகைக் குண்டுகளையும், தண்ணீர்ப் பீரங்கிகளையும், குறுந்தடிகளையும் பயன்படுத்தினர்.

அதேவேளை ஆர்ப்பாட்டக்காரர்கள் தடிகள், கற்கள் ஆகியவற்றைக் கொண்டு பதில் தாக்குதல் நடத்தினர்.

இந்தச் சம்பவங்களில் 50 பேர் காயமடைந்தார்கள் எனத் தெரிவிக்கப்பட்டது. (இ-9)

**உலக அரங்கில்**

## 20 முஸ்லிம் பிரிவினைவாதிகள் காட்டில் சுட்டுக் கொலை!

ஸ்ரீநகர், செப். 23

காஷ்மீரில் பாதுகாப்புப் படையினருடன் நடந்த மோதலில் முஸ்லிம் பிரிவினை வாதிகள் எனச் சந்தேகிக்கப்படும் 20 பேர் கொல்லப்பட்டனர்.

இதில் 16 பேர் ஸ்ரீநகருக்கு அருகே இரு கிராமங்களை படையினர் சுற்றி வளைத்ததைத் தொடர்ந்து கொல்லப்பட்டார்கள்.

குண்டு வெடிப்பு ஒன்று நடைபெற்றதைத் தொடர்ந்து விசேட பொலீஸ் படையினர் கிராமம் ஒன்றைச் சுற்றி வளைத்து தேடுதல் நடத்திய போது மேலும் நால்வர் கொல்லப்பட்டார்கள். (இ-9)

## விசாரணைக்குச் சென்ற ஐ. நா. குழு 1 மாதமாக கின்ஸாசாவில் முடக்கம்

### கொங்கோ அரசு அனுமதி அளிக்க மறுப்பு

கின்ஸாசா, செப். 23

றுவாண்டா அகதிகள் படுகொலை குறித்து நேரில் விசாரணை நடத்த கொங்கோவுக்கு (முன்னாள் ஸயர்) அனுப்பி வைக்கப்பட்ட ஐ. நா. குழு ஒரு மாதம் கழிந்தும் தனது விசாரணையை நடத்த முடியாத நிலையில் தலைநகர் கின்ஸாசாவில் தங்கி உள்ளது.

படுகொலைகள் நடந்ததாக கருதப்படும் குறிப்பிட்ட இடங்களை பார்ப்பதற்குரிய பாதுகாப்பு மற்றும் முறையான ஏற்பாடுகளை அதிபர் கபிலாவின் அரசு அதிகாரிகள் இதுவரை செய்து கொடுக்கவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

ஐ. நா. விசாரணைக்குழுவுக்கு சில நிபந்தனைகளை கபிலா அரசு விதித்துள்ளது.

எனினும் நிபந்தனைகளை மீறி ஐ. நா. குழு சில மக்களை விசாரித்துள்ளதாக கொங்கோ அரச அதிகாரிகள் குற்றஞ் சாட்டி வருகின்றனர். (இ-9)

## அணு உலையை எதிர்த்து தாய்வானில் ஆர்ப்பாட்டம்

தாய்வானின் குங்கிலியோ கடலோரப் பகுதியில் அணு உலை ஒன்றை அமைக்க தாய்வான் அரசு திட்டமிட்டுள்ளது.

இதனை எதிர்த்து 110 மீன்பிடிப் படகுகளில் அப்பகுதி மக்கள் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினார்கள்.

''எமது சுற்றுப்புறத்தின் அழகு அழியாமல் இருக்கவும், எமது சந்ததிகள் ஆபத்து இன்றி வாழவும் போராடுகிறோம்'' என ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவித்தனர். (இ-9)

## சீனாவில் வங்கிக் கொள்ளை

வங்கி ஒன்றுக்குள் புகுந்து, சுமார் 53 ஆயிரம் டொலர் பணத்தை துப்பாக்கி முனையில் கொள்ளையடித்துக் கொண்டு வெளியேறிய கொள்ளைக்காரன் ஒருவனை வழிப்போக்கர்கள் மடக்கிப் பிடித்து காவல் துறையிடம் ஒப்படைத்தனர்.

மத்திய சீனாவின் சங்காய் மாநிலத்தில் இச்சம்பவம் இடம்பெற்றது. [இ-9]

## பஸ் விபத்தில் 20 பேர் பலி!

காஷ்மீரில் உள்ள பந்தோகோட் நகருக்கு அருகில் பயணிகள் பஸ் ஒன்று பள்ளத்தில் வீழ்ந்து 20 பேர் கொல்லப்பட்டனர்; 20 பேர் படுகாயம் அடைந்தனர். (இ-9)

## ரோக்கியோவைக் குறிவைத்து வடகொரிய ஏவுகணை!

ரோக்கியோ செப். 23

ஜப்பானின் தலைநகர் ரோக்கியோவைச் சென்றடையக் கூடிய வகையில் வட. கொரியா தனது ஏவுகணைகளை வைத்திருப்பதை அமெரிக்க இராணுவச் செய்மதி கண்டு பிடித்துள்ளது.

இந்த ஏவுகணையை பரீட்சார்த்தமாக அனுப்ப வட கொரியா திட்டமிட்டிருக்கலாம் என்று ஜப்பானிய செய்தித்தாள்கள் தெரிவித்தன.

வட கொரியாவின் வட - கிழக்கு இராணுவத்தளம் ஒன்றில் இந்த ஏவுகணைகள் பொருத்தப்பட்டிருந்ததை அமெரிக்க செய்மதி பதிவு செய்துள்ளது.

அதே சமயம் ஜப்பானின் பத்திரிகைகளில் வெளியான இந்த செய்திகள் குறித்து அமெரிக்க அதிகாரிகள் இன்னமும் கருத்து தெரிவிக்கவில்லை.

1991, 93 ஆம் ஆண்டுகளில் வடகொரியா 'றேடர்-1' திட்டத்துக்கு அமைய ஏவுகணைப் பரிசோதனைகளை நடத்தியது.

இதைத் தொடர்ந்து ஜப்பானின் நிஸாபர் விமானத் தளத்தில் இரு எலக்ரோனிக் உளவு விமானங்களை அமெரிக்கா சேவையில் ஈடுபடுத்தியது. (இ-9)

## பஞ்சத்தை பயன்படுத்தி அமெரிக்கா எம்மை பணிய வைக்க முயல்கிறது

### வடகொரிய அரசாங்கம் குற்றஞ்சாட்டுகிறது

மணிலா, செப். 23

தற்பொழுது நிலவும் பஞ்சத்தைப் பயன்படுத்தி உணவுப் பொருள் உதவியை ஓர் ஆயுதமாகப் பயன்படுத்த அமெரிக்கா முயல்வதாக வட கொரிய அரசு குற்றஞ்சாட்டி உள்ளது.

வடகொரியா நாடு கடும் பஞ்சத்தின் நெருக்கடியில் நிற்கும் இக்கால கட்டத்தில் வடகொரியா, தென் கொரியா சமாதான முயற்சிகளை அமெரிக்கா முடுக்கி விட முனைந்துள்ளது.

வடகொரியா பலவீனமாக இருக்கின்ற இந்நாளில் தனது சமாதான நிபந்தனைகளுக்கு அதனைப்பணிய வைத்துவிடலாம் என்பது அமெரிக்காவின் கணக்காக இருக்கிறது.

இதன் ஒரு வியூகமாக பஞ்சத்தின் பிடியிலிருக்கும் வட கொரியாவுக்கு உணவுப் பொருள்களை சமீபகாலமாக அமெரிக்கா அனுப்பியும் வருகிறது. இச்சூழலில் உணவுப் பொருள்களை சமாதானப் பேச்சு வார்த்தையின் ஒரு ஆயுதமாக பயன்படுத்த அமெரிக்கா முயல்கிறது என வடகொரியா நேற்று முன்தினம் குற்றஞ் சாட்டியது. (இ-9)

## மறதி நோய்; பெரும் சவால்!

லண்டன், செப். 23

''அல்சைமர்'' என்ற மறதி நோய் தொடர்பாக பொதுமக்களிடையே விழிப்புணர்வைஏற்படுத்தும் பல் நாட்டுப் பரப்புரை ஒன்று தொடங்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் உலக ''அல்சைமர்'' தினமாக பிரகடனம் செய்யப்பட்டது.

அடுத்து மூன்று ஆண்டு காலத்தில் உலகில் 1 கோடி 80 லட்சம் மக்கள் இந்த நோயினால் பாதிக்கப்படுவார்கள் என வல்லுநர்கள் மதிப்பிடுகிறார்கள்.

ஞாபகசக்தியையும், புத்திக்கூர்மையையும் பாதிக்கும் இந்த நோய் பெரும்பாலும் 60 வயதுக்கு மேற்பட்டவர்களையே தாக்குகிறது.

தற்போது மக்கள் கூடியகாலம் வாழும் அபிவிருத்தி அடைந்த நாடுகளில் வாழும் மக்கள் இந்த நோயினால் பெரிதும் பாதிக்கப்படுவர் என அஞ்சப்படுகிறது.

இந்த நோயினால் பாதிக்கப்பட்டுள்ளவர்களில் அமெரிக்க முன்னாள் அதிபர் றேகனின் மனைவி நான்ஸி றேகனும் ஒருவர் என்று கூறப்படுகிறது. [இ-9]

## ஹமாஸ் எச்சரிக்கை

இஸ்ரேலில் காவலில் வைக்கப்பட்டுள்ள பலஸ்தீன தீவிரவாத இயக்கமான ஹமாஸ் இயக்க உறுப்பினர்கள் விடுவிக்கப்படாவிடில் ஆயிரக் கணக்கான ஹமாஸ் தீவிரவாத இளைஞர்கள் இஸ்ரேலின் கேந்திர நிலைகள் மீது தற்கொலைத் தாக்குதல் நடத்தி உலகப்படத்திலிருந்து அதனை அழித்துவிட தயாராக உள்ளனர். இப்படி ஹமாஸ் இயக்கத்தின் காஸா [illegible] அத்பல் என்பவர் எச்சரித்துள்ளார். (இ-9)

## வரட்சியால் 152 பேர் மரணம்:

## புகை மூட்டம் காரணமாக நிவாரண உதவிகள் பாதிப்பு

மணிலா, செப். 23

இந்தோனேஷியாவின் எரியன்டயா மாநிலத்தில் வரட்சியால் 152 பேர் இதுவரை மடிந்துள்ளனர்.

ஜகார்த்தா காடுகளில் இருந்து எழும் புகைமூட்டங்களால் எரியன்டயா மாநிலத்துக்கான அவசர நிவாரணத் உதவிகள் தடைப்பட்டுள்ளன.

புகைமூட்டம் காரணமாக விமானங்கள் அப்பகுதிக்கு பறக்க முடியாத நிலைமை இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ-9)

## கல்யாண்சிங் பதவி ஏற்பு

புதுடில்லி, செப். 23

உத்தரப் பிரதேசத்தில் பாரதீய ஜனதாக் கட்சியின் மூத்த உறுப்பினர் கல்யாண்சிங் நேற்று முன்தினம் முதல்வராக பதவியேற்றார்.

ஆறு மாதங்கள் முதல்வராக இருந்த திருமதி மாயாவதி கடந்த சனிக்கிழமை பதவியை ராஜினாமா செய்து கல்யாண்சிங்குக்கு வழிவகுத்துக் கொடுத்துள்ளார். (இ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6 பிரதேச செயலர் பிரிவுகளில் அபிவிருத்தித் திட்டங்கள்

வரவு - செலவுத் திட்ட ஒதுக்கீட்டு நிதியில் இருந்து யாழ். மாவட்டத்தில் 6 பிர தேச செயலர் பிரிவுகளில் 21 லட்சத்து 45 ஆயிரம் ரூபா செலவில் பல செயல் திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்படவிருக்கின்றன.

யாழ். மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதியில் இருந்து மேற்கொள்ளப் படும் இத் திட்டங்களும், அதற்கான நிதி ஒதுக்கீடு விவரமும் வருமாறு:

யாழ்ப்பாணம்

சென். செபஸ்தியர் ச.ச. நிலைய கட்டடம் திருத்த 25 ஆயிரம் ரூபா.

★ குருநகர் பாரதி ச. ச. நிலையம் திருத்த 25 ஆயி ரம் ரூபா.

★ குருநகர் சென். றோக் ச. ச. நிலையம் திருத்த - 25 ஆயிரம் ரூபா.

நல்லூர்

★ கச்சேரி - கிழக்கு ச, ச. நிலைய கட்டடம் திருத்த - 25 ஆயிரம் ரூபா.

★ ஆசீர்வாதப்பர் வீதி காந்தி ச. ச. நிலையம் கட் டடம் திருத்த - 25 ஆயிரம் ரூபா.

★ கோண்டாவில் ஞான வீர ச. ச. நிலையம் திருத்த 25 ஆயிரம் ரூபா.

சண்டிலிப்பாய்

★ ஆலங்குலாய் ச. ச. நிலைய கட்டடம் - 50 ஆயி ரம் ரூபா.

கோப்பாய்

★ கோப்பாய் ஸ்ரீல ஸ்ரீ சிவஞான பண்டிதர் நூலக புத்தக கொள்வனவு - 25 ஆயிரம் ரூபா.

★ நீர்வேலி ஸ்ரீ முருகன் மாதர் அபிவிருத்தி சங்கம் - 35 ஆயிரம் ரூபா

★ புத்தூர் கிழக்கு மகாத் மாஜி ச. ச. நிலையம் - 25 ஆயிரம் ரூபா.

பருத்தித்துறை

★ உடுப்பிட்டி - கெருடா வில் தெற்கு கலையரசி ச.ச. கட்டடம் - 25 ஆயிரம் ரூபா.

சாவகச்சேரி

★ சாவகச்சேரி, சங்கத் தானை ச. ச. நிலையம்— 25 ஆயிரம் ரூபா.

★ கைதடி— மேற்கு ச. ச. நிலையத்துக்கு குழாய்க் கிணறு— 60 ஆயிரம் ரூபா.

முன்னுரிமை அடிப்படை யில் மாவட்டத்தில் மேற் கொள்ளப்படவிருக்கும் திட் டங்கள் வருமாறு:-

★ யாழ். செயலகத்துக்கு ஜெனரேற்றர் கொள் வனவு— 4 லட்சத்து 50 ஆயி ரம் ரூபா.

★ கடந்த வருடம் ஜென ரேற்றர் வாங்கிய மீதிப் பணம்—50 ஆயிரம் ரூபா.

★ இரு சில்லு உழவு இயந் திரம் கொள்வனவு— ஒருலட் சம் ரூபா.

★ லங்கா ஆயுள்வேதக் கல்லூரி திருத்த— 5 லட்சம் ரூபா.

★ ஊன முற்றோருக்கான முச்சக்கரவண்டி, ஊன்று கோல், கட்புல இயந்திரம், வெள்ளைப்பிரம்பு, ஜெய் பூர் செயற்கை கை மற்றும் கால் கொள்வனவுக்கு— 6 லட்சத்து 50 ஆயிரம் ரூபா.

(இ-3)

# நாவற்குழி வீடமைப்பு திட்டத்தில் குடியமர்த்தக் கோரிக்கை

வலி. வடக்கு பிரதேச செய லர் பிரிவில் மயிலிட்டிப் பகுதியில் இருந்து இடம் பெயர்ந்து மீளத் தமது இருப் பிடங்களுக்கு செல்ல முடி யாத நிலையில் உள்ளவர் களை நாவற்குழி வீடமைப் புத்திட்டத்தில் குடியமர்த்து மாறு வடமாகாண மீள்குடி யமர்வு புனர்வாழ்வு அதி கார சபைத் தலைவர் சோமபால குணதிலகவிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள் ளது.

நல்லெண்ணத்துக்கும், சமாதானத்துக்குமான குழு மேற்கண்ட கோரிக்கையை விடுத்துள்ளது.

கடந்தவாரம் அவர் யாழ்ப் பாணம் வந்த சமயமே இக் கோரிக்கைகள் விடுக்கப்பட்டது.

நாவற்குழியில் உள்ள வீட மைப்புத் திட்டத்தில் உள்ள 298 வீடுகளையும் திருத்தி இடம் பெயர்ந்தவர்களுக்கு வழங்க ஏற்பாடு செய்வதாக அவர் உறுதியளித்தார்.

இந்தக் குடும்பங்கள் தற் சமயம் உடுவில், மருதனார் மடம் பகுதிகளில் தற்காலிக கொட்டில்களை அமைத்து வாழ்ந்து வருகின்றன.

(இ-3)

## நேர்முகப்பரீட்சை

பட்டப் பின் டிப்ளோமா பயிற்சி நெறிக்கு பட்டதாரி ஆசிரியர்களை தெரிவு செய் வதற்கான நேர்முகப்பரீட்சை கள் இம்மாத இறுதியில் தேசிய கல்வி நிறுவனத்தால் நடத்தப்பட உள்ளன.

# யாழ். நகரிலிருந்து பொருள்களை எடுத்துச் செல்ல முடியாத நிலைமை

## தீவுப்பகுதி வர்த்தகர்கள் அவலம்

நெடுந்தீவு, செப். 23

புங்குடுதீவு, நெடுந்தீவு, நயினாதீவு பகுதியில் உள்ள தனிப்பட்ட வியாபாரிகள் தங்கள் வியாபார நிலையங் களுக்கு வேண்டிய பொருள் களை யாழ். நகரில் இருந்து எடுத்துச் செல்வது கட்டுப் படுத்தப்பட்டுள்ளது.

இதனால் தீவுப்பகுதியில் இருந்து யாழ். நகருக்கு பொருள் கொள்வனவுக்காக வந்த தனியார் வர்த்தகர்கள் யாழ். நகரில் இருந்து பொருள்களை எடுத்துச் செல்லமுடியாத நிலையில் திரும்பிச் சென்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தக் கட்டுப்பாடு தற் காலிகமானது என்று தெரி விக்கப்பட்ட போதும் இது நீடிப்பதால் தீவுப்பகுதியில் உள்ள தனியார் வர்த்தக நிலையங்கள் பொருள்கள் இன்றி வெறிச்சோடிக்கிடப்ப தாகக் கூறப்படுகிறது.

இதே சமயம் யாழ். நகரில் இருந்து தமது சொந்த இடங் களுக்குத் திரும்பும் நெடுந் தீவு, புங்குடுதீவு, நயினாதீவு மக்கள் அரிசி, மரக்கறி போன்றவற்றை ஒவ்வொன் றும் இரண்டு கிலோ மட்டுமே எடுத்துச் செல்கின்றனர்.

இதே சமயம் மேற்படி பகுதிகளுக்கு பலநோக்கு கூட் டுறவுச் சங்கம் மூலம் நிவா ரணப் பொருள்கள் வழமை போல விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

(இ-103)

## சைவ சித்தாந்த பண்டிதர் பரீட்சை முடிவுகள்

யாழ். சைவ பரிபாலன சபையாரால் கடந்த மே மாதம் நடத்தப்பட்ட சைவ சித்தாந்த பண்டிதர் பரீட்சை முடிவுகள் வெளியாகியுள் ளன.

சித்தாந்தப் பிரவேச பண்டி தர் பரீட்சையில் 3ஆம் பிரிவில் து. அருந்தவசீலனும்- சித்தாந்தப் பாலபண்டிதர் பரீட்சையில் 2ஆம் பிரிவில் இ. நித்தியானந்தன், க. மணி மாறன், செ. சிவபாதம், க. சத்தியதாசன் ஆகியோரும் 3 ஆம் பிரிவில் செல்வி. சி. தவமலரும் - சித்தி அடைந் துள்ளனர்.

(இ-3)

## 2 மாணவிகளுக்கு தீக் காயம்

தென்மராட்சி. செப். 23

குப்பிவிளக்கு சரிந்துவீழ்ந்து காயமடைந்த இரண்டு மாணவிகள் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

மறவன்புலோவில் இடம் பெற்ற சம்பவத்தில் நாகலிங் கம் ரகுமாலினி (வயது 20) என்பவரும், மிருசுவில்வடக்கு மன்னன் குறுச்சியில் இடம் பெற்ற சம்பவத்தில் சிவராசா சிவரூபி (வயது 16) என்பவ ரும் தீக் காயங்களுக்கு உள் ளாகினர்.

இரவு காயங்களுக்கு உள் ளான போதிலும் வாகன வசதி இல்லாததால் மறு நாள் காலையிலேயே அவர் கள் ஆஸ்பத்திரிக்கு கொண்டு வரப்பட்டனர்.

(இ-117)

# சிறுவர் பாடசாலைகளை புனரமைக்க ஐ. நா. நிதி உதவி

நெல்லியடி, செப். 23

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் மூன்று முன் பள்ளி சிறுவர் பாடசாலை களைப் புனரமைக்க அகதி களுக்கான ஐ. நா. தூதரகம் நிதி ஒதுக்கியுள்ளது.

இவ்வேலைத் திட்டங்களை ஆரம்பிப்பதற்கான நடவடிக் கைகளுக்கு பருத்தித்துறை பிரதேச செயலர் ஆ. சிவ சுவாமி திட்டப் பணிப்பாளர் எம். மகேந்திரன் மற்றும் சனசமூக நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோ ருக்கு சனசமூக நிலையங் களின் நிர்வாகிகள் ஒத்து ழைப்பு வழங்க வேண்டு மென்று பருத்தித்துறை பிர தேச சபை செயலர் ச. செவ்வந்திநாதர் தெரிவித் துள்ளார்.

இம் மூன்று முன்பள்ளி சிறு வர் பாடசாலைகளும் வட மராட்சிப்பகுதியில் குரும்பை கட்டி சனசமூக நிலையம், அல்வாய் வடக்கு நக்கீரன் சனசமூக நிலையம், பொலி கண்டி பாரதி சனசமூக நிலையம் ஆகியவற்றின் கீழ் இயங்கவுள்ளன.

(இ-109)

# கப்பலுக்காக திருகோணமலையில் காத்திருந்த யாழ். மாணவிகளுக்கு ஏற்பட்ட அவஸ்தைகள்

காங்கேசன் - திருகோணமலை கப்பல் சேவை தடைப்பட்டு இரண்டரை மாதங்கள் கடந்துவிட்டன.

அதனால் பாதிக்கப்பட்டவர்கள் பல தரப்பினர் கள். மாகாண மட்டத்திலான வலைப்பந்தாட்டப் போட்டிகளில் கலந்து கொள்வதற்குத் திருகோண மலை சென்று அவஸ்தைப்பட்ட யாழ்ப்பாணப் பாட சாலைகளின் மாணவிகளும் அவர்களில் ஒரு சாரார்.

அந்த மாணவிகளின் சார்பில் பாதிப்புற்ற மாணவி ஒருவர் திருமலையிலிருந்து உதயனுக்கு மனவருத் தத்துடன் வடித்த மடல் கடந்த வாரம் தான் கிடைத்தது.

போட்டிக்குச் சென்ற யாழ். மாணவிகள், மன் னார் போய் அங்கிருந்துகப்பல் மூலம் வந்து சேர்ந்து விட்டனர்; இந்த மடல் கிடைப்பதற்கு முன்னர்!

எனினும் மாணவிகள் அனுபவித்த கஷ்டங்களை இப்போதாவது வெளிச்சத்துக்குக் கொண்டுவரும் நோக்குடன் அந்த மடலை இங்கு பிரசுரிக்கிறோம்.

எம்மிடம் உள்ள பணம் அனைத்தும் தீர்ந்து போய் விட்டது. ஆடைகளைத் துவைப்பதற்கு சவர்க்காரம் வாங்கக் கூட கையில் பணம் இல்லை. மாற்றி உடுப்பதற் குக் கூட ஓர் ஆடைதான் இருந்தது. துவைத்த ஆடை களை உலரப் போட்டுவிட்டு பார்த்துக் கொண்டிருப் போம்..

நாம் அனைவரும் பிரபல மான பாடசாலை மாணவர் கள். அனேகமாக கஷ்டம் தெரியாமல் வாழ்ந்தவர்கள் என்று கூறலாம். வலய மட் டங்களில் நடைபெற்ற வலைப்பந்தாட்டப் போட்டி களில் தெரிவாகி திருகோண மலை செல்வதற்கு நாம் தெரிவானோம். அன்று எமக்கு இருந்த மகிழ்ச்சிக்கு அளவே இருக்கவில்லை.

திருகோணமலையிலும் வெல்வோம் என்ற நம்பிக் பிக்கையுடன் பெற்றோரிட மும், உறவினர்களிடமும் விடைபெற்று திருகோண மலை வந்தோம்.

போட்டி முடிவுகள் எமக்கு சாதகமாக அமையவில்லை. என்றாலும், பயண மகிழ்ச் சியுடன் யாழ். திரும்புவ தற்கு புறப்பட்டோம். அப் போது ''இன்று கப்பல்சேவை இல்லை நாளை நடை பெறும்'' என்ற அறிவிப்பு எமக்குக் கிடைத்தது. இவ் வாறு பலதடவை தொடர்ச் சியான ஏமாற்றங்கள்.

இதில் வேடிக்கையான விட யம் என்னவென்றால், யாழ். பயணமாக இருந்த போது மற்றைய பயணிகளைப் போல நாமும் வெற்றிலை வாங்கி வைத்திருந்தோம் என்பதுதான்.

பயணம் தடைப்பட்ட தால் அவற்றை விற்பதற்குப் பெரும் போட்டி ஏற்பட்டது. பலர் அவற்றை மலிவாகவே விற்றுவிட்டனர். நாம் பெண்கள் என்பதால் இலகு வாக விற்றுவிட்டோம்.

மாற்றி உடுப்பதற்கு ஓர் ஆடைமட்டுமே இருந்தது. பெண்கள் ஆகிய எமக்கு இயற்கையே பல பிரச்சினை களைத் தருகிறது. இதை எண்ணி சில மாணவிகள் அழுதே விட்டார்கள்.

### சூரியன் உதிக்கு முன் எழுவோம்

காலையில் சூரியன் உதிப் பதற்கு முன்னரே நாம் அனைவரும் முண்டி அடித் துக்கொண்டு குளிப்போம்.

ஏனெனில் விடிந்தால் நாம் பலர் கண்களுக்கு விருந்தாகி விடுவோம்.

இந்தக் கேவலமான வாழ்க் கையை பல [illegible] அனுபவிக்கிறோம். இது இன்னும் எத்தனை காலத் துக்கென்று எண்ணும் போது எமக்கு பயமாக உள்ளது.

பெற்றோரிடமிருந்தும்; உறவினர்கள், நண்பர்களிட மிருந்தும் பிரிந்து போயுள்ள எமக்கு நாம் புலம் பெயர்ந்து இருந்த வேளை கிடைத்த உணவுகூட கிடைப்பதில்லை.

பிரபல்ய வர்த்தகர்களும் முதன்னிலை உத்தியோகத் தர்களும் எமக்கு நன்கொடை களை வழங்கினர். இதை எண்ணும் போது எமக்கு வேதனையாக உள்ளது. எமது இயலாமை அந்தளவு நிலையில் இருந்தது.

'உண்ணீர் உண்ணீர் என்று உபசரியார் மாட்டு உண் ணாமை கோடி பெறும்' என்றுபடித்ததுண்டு. ஆனால் இங்கு உணவு, உணவு என்று வரிசையாக நின்று வாங்கி உண்ண நேரிடுகிறது.

அரச தரப்பினரோ கப்பல் கிடைத்து விட்டது; கப்பல் திருத்த வேண்டும்; திருத்தி யதைப் பார்க்க வேண்டும்; இயந்திரம் வேகமாக வேலை செய்யவில்லை; 40 கிலோ மீற்றர் தூரத்தில் செல்ல சக்தி போதாது; இயந்திரம் மீண்டும் பழுதடைந்து விட் டது; திருத்த வேலைகள் ஆரம்பம்; கப்பல் சேவை விரைவில்; என்று தொடர்ந்து அறிக்கைகள் வெளியிட்டுக் கொண்டிருகின் றனர்.

நாம் தமிழர்களாக இல்லா மல் இருந்திருந்தாலும் இது தான் நிலையா? அல்லது விளையாட்டு வீரர்கள்தானே இவர்களுக்கு எதுக்கு படிப்பு என்று அரசாங்கம் நினைக் கின்றதா? அல்லது விடுத லைப் புலிகளால்தான் கப் பல் பயணம் தடைப்பட்டது அனுபவிக்கட்டும் கஷ்டங் களை என்ற போக்கா? என்று எமக்கு விளங்க வில்லை.

### அரசு நினைத்தால் அனுப்ப முடியும்

எது எப்படியிருப்பினும் ஒன்று மட்டும் உண்மை. அது என்னவென்றால் அரசு நினைத்திருந்தால் மறுநாளே எம்மை யாழ்ப்பாணத்துக்கு அனுப்பியிருக்க முடியும் என் பதே ஆகும். இராணுவக் கப்பல் போக்குவரத்து இன் னும் நடைபெறுகிறது. அது தடைப்பட்டதாகத் தெரிய வில்லை. கப்பல் சேவை தமக் குக் கிடைப்பதாக இராணு வத்தினரே கூறுகின்றனர்.

ஆனால், நாமோ கப்பல் போக்குவரத்தை எண்ணிக் கண்ணீர் வடித்துக் கொண் ருக்கிறோம். இறைவனைப் பிரார்த்தித்துக் கொண்டிருக் கிறோம். நாம் யாழ். மண் ணில் காலடி எடுத்து வைக் கும் அந்த நன்னாளை எதிர் பார்த்துக் காத்திருக்கிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம் ... நூலகம்

# பேரினவாதச் சக்திகளை எதிர்கொள்ள ஜனாதிபதி, அமைச்சரவை திடசங்கற்பம்

## வேலணைக் கூட்டத்தில் அமைச்சுச் செயலாளர் உரை

யாழ்ப்பாணம், செப். 23

"இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண பண்டாரநாயக்கவும், டட்லி சேனநாயக்கவும் முன்னர் முயற்சித்த போது, அதற்கு எதிராக எழுந்த பேரினவாதத்துக்கு முன் நிற்க அவர்களுக்கு துணிவு இருக்கவில்லை. அதனால் அந்த முயற்சிகள் தோல்வி கண்டன. ஆனால் இன்று நிலைமை வேறு. பேரினவாதச் சக்திகள் கிளம்பினாலும், இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில் ஜனாதிபதியும், அமைச்சரவையும் துணிவுடன் செயற்பட உறுதி பூண்டுள்ளதால் நிச்சயம் இந்த முயற்சி வெற்றி பெற்று நிரந்தர தீர்வு ஏற்படும்''

நீதி, அரசமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸின் அமைச்சுச் செயலாளர் பரணவிதான மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அரசு முன்வைத்துள்ள அதிகாரப் பரவலாக்கல் யோசனைகளை விளக்கும் வகையில் நேற்று முன்தினம் வேலணை சேர். வைத்திலிங்கம் துரைச்சுவாமி ம. வித்தியாலயத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டத்தில் பேசுகையில் அவர் இப்படிக் கூறினார்.

தீவுப்பகுதி இராணுவ அதிகாரி கேணல் விஜயசுந்தர தலைமையில் நடந்த இக் கூட்டத்தில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

இன்று யுத்தம் பற்றிப் பேச நான் வரவில்லை. தற்போதைய யுத்த நிலையில் தெற்கில் ஏற்பட்ட மாற்றம் குறித்து உங்களுக்கு தெரிவிக்க வேண்டியுள்ளது.

வடக்கு - கிழக்கில் யுத்தம் நடக்க தெற்கில் அரசியல் சிந்தனை மாற்றம் ஏற்பட்டுள்ளது.

தற்போதைய அரசாங்கம் பதவியேற்ற கடந்த 3 வருட காலத்திலேயே இந்த மாற்றம் ஏற்பட்டுள்ளது.

''தமிழ் மக்களுக்கு பிரச்சினை ஒன்றுமில்லை. அங்கு இருப்பது பயங்கரவாதப் பிரச்சினையே. அந்த பயங்கரவாதப் பிரச்சினையை யுத்தத்தின் மூலம் முடிக்க வேண்டும்'' என்று சிங்கள இனவாதத் தலைவர்களால் கூறப்பட்ட விடயத்தை மக்கள் முன்னர் ஏற்றிருந்தார்கள்.

அந்த நிலையை மாற்றி ''தமிழர்களுக்கு பிரச்சினை உண்டு. அவற்றுக்கு தீர்வு காண வேண்டியது அவசியம்'' என்ற சிந்தனையை வளர்த்து அதன் மூலம் மூன்று தேர்தல்களில் வெற்றி பெற்று சிங்கள மக்களின் ஆதரவைப் பெற்றுள்ளோம். இது தான் தெற்கில் ஏற்பட்டுள்ள சிந்தனை மாற்றமாகும்.

### சமாதானப் பேச்சு

இன்றைய அரசாங்கம் பதவியேற்றபோது . சமாதானப் பேச்சுக்களை ஆரம்பித்தோம்.

அந்தப்பேச்சுக்கள் தோல்வியில் முடிந்தபோதும் நாம் சமாதான முயற்சியைக் கைவிடவில்லை. 1995 ஆம் ஆண்டு அதிகாரப்பரவலாக்கல் யோசனைகளை முன்வைத்து தெற்கில் அந்த யோசன்னைகள் தொடர்பாக கலந்துரையாடல்களை நடத்தி மக்களுக்கு விளக்கியுள்ளோம்.

இன்று வடக்கிலும் கூட்டங்களை நடத்தி அத்தீர்வு யோசனைகள் தொடர்பாக விளக்கி வருகிறோம்.

இன்று நாட்டில் உள்ள சகல பிரச்சினைகளுக்கும் தீர்வு காண அரசமைப்பு முற்றாக மாற்றப்பட வேண்டும் என்று இக் கலந்துரையாடல்களில் மக்கள் ஆலோசனை கூறுகிறார்கள்.

அதிகாரப்பரவலாக்கல் யோசனைகள் குறித்து ஆராய்ந்து வரும் நாடாளுமன்ற தெரிவுக்குழு புதிய யோசனைகளில் 80 சதவீதமானவற்றுக்கு அங்கீகாரம் வழங்கியுள்ளது. ஓரிரு விடயங்கள் குறித்து அக்குழு தற்சமயம் ஆராய்ந்து வருகின்றது. அந்த விடயங்களும் பேசி முடிவெடுக்கப்படும் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு.

இந்தியா தனது 50 ஆவது சுதந்திர பொன்விழாவை சாதி, மத, மொழி வேறுபாடின்றிக் கொண்டாடிக் கொண்டிருக்கிறது. வெளிநாட்டவரிடம் இருந்து சுதந்திரம் பெற்ற போது அங்குள்ள தலைவர்கள் நாட்டின் எதிர்காலம் குறித்து சிந்தித்து, அதற்கேற்றபடி அரசமைப்பை நிர்ணயித்தார்கள். இன்று எந்த வித பிரச்சினையும் இன்றி சகலரும் சந்தோஷமாக வாழ்கிறார்கள்.

எமது நாடு பிரிட்டிஷாரிடம் இருந்து சுதந்திரம்பெற்ற போது, நாட்டில் உள்ள 3 இனங்களின் எதிர்காலம் குறித்து சிந்திக்க அன்றைய தலைவர்கள் தவறிவிட்டனர். அன்றைய தலைவர்கள் செய்த தவறே இன்றைய யுத்தத்துக்கு மூலகாரணமாக அமைந்துள்ளது.

தமிழர் பிரச்சினையை தீர்க்குமாறு தமிழ்த் தலைவர்கள் நாடு சுதந்திரம் பெற்ற நாளில் இருந்து கோரிவருகின்றனர்.

ஆனால் பெரும்பான்மை மக்களுக்காகவே தெற்கு தலைவர்கள் செயற்பட்டு வந்துள்ளனர்.

### ஒற்றையாட்சி ஏற்கக் கூடியதல்ல

மீண்டும் சகல மக்களும் இணைந்து நாட்டைக் கட்டி எழுப்பும் வகையில் இன்று அதிகாரங்கள் பகிரப்பட திட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது.

21 ஆம் நூற்றாண்டின் நவீன யுகத்துக்குள் உலகம் பிரவேசிக்கும் போது, நாம் மட்டும் ஒற்றையாட்சி என்று கூறிக் கொண்டு நிற்பது ஏற்கக் கூடிய விடயமல்ல. ஆகவே ஒற்றையாட்சியை மாற்றி கூட்டாட்சியின் கீழ் தீர்வு காணப்பட வேண்டும் என்று கோரப்படுகிறது.

கூட்டாட்சி முறையின் கீழ் பிராந்திய சபைகளுக்கு அதிகாரம் வழங்கும் வகையில் புதிய அரசமைப்பு உருவாக்கப்பட்டு வருகிறது.

சுகாதாரம், கல்வி, விவசாயம், நீர்ப்பாசனம், பொலீஸ், பிராந்திய வளங்கள், காணி போன்ற முக்கிய விடயங்கள் பிராந்திய சபைகளுக்கு வழங்கப்படும்.

தமிழர் பிரச்சின்ன பூதாகரமாக எழக் காரணமாகவிருந்த நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை நாம் ஒழிக்கப் போகிறோம்.

இந்த முறையின் கீழ் கொண்டுவரப்பட்ட 6 ஆவது திருத்தத்துக்குஎதிர்ப்புத்தெரிவித்தே தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் வெளியேறினார்கள்.

அதன் பின்னர் சரியான தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் வரவில்லை.

இந்தியாவில் உள்ளது போன்ற ஜனாதிபதி முறையையே இங்கு கொண்டுவரப் போகிறோம். பிரதமர், நாடாளுமன்றம் ஆகியோரின் ஆலோசனைப்படியே அவர் செயற்படுவார்.

### பிரிட்டிஷார் வகுத்த எல்லைகள்

இன்று அதிகாரப்பரவல் அலகு பற்றி பேசப்படுகிறது. வடக்கு - கிழக்கு ஒன்றாக இருக்க வேண்டும் என்றும், வடக்கு - கிழக்கு அலகுக்குள் முஸ்லிம்களுக்கு தனி அலகு வேண்டும் என்றும் கோரப்பட்டு வருகிறது. இந்தக் கோரிக்கைகளுக்கு யுத்தம் தேவையில்லை.

இன்று உள்ள மாகாண எல்லைகள் பிரிட்டிஷாரால் வகுக்கப்பட்டவையே ஆகும். அந்த எல்லைகளை மாற்ற கடந்த காலத் தலைவர்கள் தவறிவிட்டனர்.

புதிய மாகாண எல்லைகளை நிர்ணயம் செய்ய அரசு விரும்புகிறது.

எந்தவொரு இனத்தின் பாரம்பரியமும் பாதிக்காத வகையில் எல்லை நிர்ணயம் செய்ய யோசிக்கிறோம். இந்த விடயம் ஆழமான கலந்துரையாடலின் பின்னர் செய்யப்பட வேண்டியுள்ளது.

கடந்த காலங்களில் கொண்டுவரப்பட்ட ஒப்பந்தங்களோ, அரசமைப்பு மாற்றங்களோ கீழ்மட்ட மக்களின் ஆலோசனையின்றி கொண்டு வரப்பட்டதாலும், இனவாதிகளின் எதிர்ப்பு எழுந்ததாலும் தோல்விகண்டன.

இன்று கீழ்மட்ட மக்களின் ஆலோசனையுடன் கொண்டு வரப்படும் அதிகாரப்பரவலாக்கல் நிறைவேற்றப்பட்டு மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்படும் என அரசு திடமாக நம்புகிறது.

இப்படி அவர் கூறினார். (இ-3)

---

# போரை முடிவுக்குகொண்டுவந்து பேச்சுவார்த்தை மூலம் தீர்வு

## அனுருத்த ரத்வத்த தெரிவிப்பு

கொழும்பு, செப். 23

விடுதலைப் புலிகளுக்கு எதிரான யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்து பேச்சுவார்த்தை மூலம் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்படும்.

பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்த இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ரூபவாஹினியில் நேரடியாக அஞ்சல் செய்யப்பட்ட 'ஜனமந்தலே' என்ற நிகழ்ச்சியில் அமைச்சர் கலந்து கொண்டு இந்தக் கருத்தைத் தெரிவித்தார்.

இந்த யுத்தம் தமிழ் மக்களுக்கெதிராக நடத்தப்படவில்லை. விடுதலைப் புலிகளால் பழிவாங்கப்பட்ட வடபகுதி மக்களை பாதுகாப்புப் படையினர் விடுதலை செய்துள்ளனர். அரசாங்கம் ஆட்சிக்கு வந்தபின்னர் மிகக் குறுகியகாலத்தில் இந்த நோக்கம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

வடபகுதியில்இராணுவநடவடிக்கை காரணமாக புலிகள் பலவீனமடைந்துள்ளனர். எனவே, படையினரின் கவனத்தை ஏனைய பகுதிகளுக்குத் திருப்புவதற்காக அவர்கள் பல்வேறு உபாயங்களைக் கடைப்பிடிக்கின்றனர். புலிகளைப் படையினர் தோல்வியடையச் செய்தபின்னர் நாட்டில் சமாதானம் நிலைநாட்டப்படும்.

இப்படி அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# மறைக்கல்வித்தேர்வு

யாழ்ப்பாணம், செப்.23

மறைக்கல்வி நிலையத்தின் ஏற்பாட்டில் றோமன் கத்தோலிக்க மாணவர்களுக்கான மறைக்கல்வித்தேர்வு எதிர்வரும் 27 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு நடைபெறவிருப்பதாக மறைக்கல்வி நிலைய இயக்குநர் அருட்திரு. ஆர். எச். சகாயநாயகம் தெரிவித்துள்ளார்.

இந்தத்தேர்வு பாடசாலை ரீதியாக நடைபெறும் என்றும் அவர் தெரிவித்தார். (இ-3)

# கண்காட்சியும் சான்றிதழ் வழங்கலும்

யாழ்ப்பாணம், செப்.23

கல்வித்திணைக்களம் வலயம் 1இன் மனைப்பொருளியல் தையற் கண்காட்சியும் சான்றிதழ் வழங்கும் வைபவமும் யாழ். கன்னியர் மடம் மகாவித்தியாலயத்தில் 26 ஆம் 27 ஆம், 28ஆம், திகதிகளில் நடைபெற உள்ளன.

எதிர்வரும் 28 ஆம் திகதி மாலை 2 மணிக்கு சான்றிதழ் வழங்கும் வைபவம் இடம் பெறும். (இ-9)

# கண்பரிசோதனை முகாம்

யாழ்ப்பாணம், செப். 23

இணுவில் மஞ்சத்தடி விவேகானந்தா கிராம அபிவிருத்திச் சங்கத்தின் ஏற்பாட்டில் கண்பரிசோதனை முகாம் சங்க மண்டபத்தில் நடைபெற்றது.

வைத்திய கலாநிதி, கண் வைத்திய நிபுணர் எஸ். குகதாசன் 300 -க்கு மேற்பட்டவர்களைப் பரிசோதித்தார்.

இச்சோதனையின் போது 34 பேர் சத்திரசிகிச்சைக்கு தெரிவு செய்யப்பட்டதாகவும் —

இவர்களில் 10 பேர் சத்திர சிகிச்சைக்காக யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்றும் - சங்கத் தலைவர் பெ. கனகசபாபதி தெரிவித்தார். (இ-3)

# வைத்தியசாலை அபிவிருத்திச் சபை

நெடுந்தீவு, செப். 23

நெடுந்தீவு மாவட்ட வைத்தியசாலையின் அத்தியாவசிய தேவைகளையும் நோயாளர்களின் நலன்களையும் கவனிக்கும் பொருட்டு நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் நா. இராமச்சந்திரன் தலைமையில் வைத்தியசாலை அபிவிருத்திச் சபை அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

வைத்திய அதிகாரி திருமதி யோ. யாழினி உட்பட பதினொரு உறுப்பினர்கள் இதில் இடம் பெற்றுள்ளனர். (இ-[illegible])

# குடும்பப் பெண்களுக்கு கெயர் கருத்தரங்கு

மானிப்பாய், செப் 23

மானிப்பாய், மாதகல், வடலியடைப்பு, பண்டத்தரிப்பு, சண்டிலிப்பாய் ஆகிய ஐந்து பகுதிகளிலும் உள்ள வறிய நிலையிலுள்ள குடும்பப் பெண்களுக்கு உயிரியல் மூலவள வீட்டுத்தோட்டச் செய்கைக் கருத்தரங்குகள் கெயர்ஸ்தாபனத்தினால் நடத்தப்படவுள்ளன.

முதல் கருத்தரங்கில் வீட்டுத் தோட்டத்துக்குரிய விதைகள் வழங்கப்பட்டு இரசாயனப் பசளை இடாமல் இயற்கைப் பசளைப் பாவனைக்கான உதவிகள் வழங்கப்படும்.

இதனைத் தொடர்ந்து நீர்ப்பாசன வசதிகளும் பீடைக்கட்டுப்பாட்டு வசதிகளும் அளிக்கப்பட்டு இவர்கள் ஊக்குவிக்கப்படவுள்ளனர் என கெயர் ஸ்தாபன திட்டமிடல் அதிகாரி தெரிவித்துள்ளார்.

மானிப்பாய் பகுதிகளிலுள்ள விவசாய சம்மேளனங்களின் அனுசரணையுடன் மானிப்பாய்ப் பகுதி வாழ் குடும்பப் பெண்களுக்கான கருத்தரங்குகள் மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலையில் நடைபெற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. (இ-90)

# 400 பேருக்கு கண் பரிசோதனை

வடமராட்சி லயன்ஸ்கழகம் நடத்திய இலவச கண் பரிசோதனை முகாமில் 400 பேருக்கு பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

இவர்களில் விழிவெண்படல சத்திரசிகிச்சைக்காகவும், மேலதிக சிகிச்சைக்காகவும் 145 பேர் தெரிவு செய்யப்பட்டனர். கண்ணாடி வழங்குவதற்காக 70 பேர் தெரிவுசெய்யப்பட்டனர்.

மேலதிக சிகிச்சைக்கும், விழிவெண்படல சத்திர சிகிச்சைக்கும் தெரிவு செய்யப்பட்டோருக்கான சிகிச்சைகள் யாழ். போதனா வைத்தியசாலையில் வைத்து மற்றொரு தினத்தில் மேற்கொள்ளப்படும் என வடமராட்சி லயன்ஸ் கழகத்தலைவர் ஆ. சிவசுவாமி தெரிவித்தார்.

கண்ணாடி வழங்க தெரிவான 70 பேருக்கும் வடமராட்சி லயன்ஸ் கழகம் இலவசமாக கண்ணாடிகளை விரைவில் வழங்கவுள்ளது.

இலவசமாக வழங்குவதற்கு தேவையான கண்ணாடிகள் கடந்தவாரம் கொழும்பிலிருந்து வடமராட்சி லயன்ஸ் கழகத்தினரால் எடுத்துவரப்பட்டுள்ளன.

இக் கண் பரிசோதனை முகாம் மந்திகையிலுள்ள லயன்ஸ் கழக பணிமனையில் வைத்து நடத்தப்பட்டது. (இ-173)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ் சிறு விளம்பரம்

### காணி விற்பனைக்கு

ஏழாலை தெற்கு ஸ்ரீ முருகன் வித்தியாலத்திற்கு முன்பாக இருக்கும் மு. சங்கரப்பிள்ளை என்பவரின் காணி 8பரப்பு 15 குழி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: திருமதி க. கணேசதாசன், ஏழாலை மேற்கு, ஏழாலை மகாவித்தியாலயத்திற்கு அருகாமை. (49780)

### வாடகைக்கு

கே.கே.எஸ். வீதி, மனோகராச் சந்தி அயலில் வீடு அல்லது வீட்டின் ஒருபகுதி வாடகைக்குத் தேவை. மே/பா இல. 654, உதயன், யாழ்ப்பாணம். (49793)

### கோழிச்குஞ்சு விற்பனைக்கு

ஒரு மாத கலப்பின பேட்டுக் கோழிக் குஞ்சுகளும், சேவல் குஞ்சுகளும் விற்பனைக்குண்டு. சோடி ரூபா 160. தொடர்பு: கே.வி.சாமி, 131/1, அம்பலவாணர் வீதி, அத்தியடி, யாழ்ப்பாணம். (49787)

### புலமைப்பரிசில் – 1997

பரீட்சைத் திணைக்களத்தால் வெளியிடப்பட்ட புள்ளித்திட்டம் (விடைகள்) பெற்றுக் கொள்ளலாம். Bond, 58 A, ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம். [49717]

### அக்கரைச் சீமையில்

இலங்கை - இங்கிலாந்து நாவல் 25/-, நாடகம் எழுதுவது எப்படி? என்று விளக்கிக் கூறும் முதலாவது தமிழ் நூல் 50/-. அராலியூர் ந. சுந்தரம்பிள்ளை எழுதியவை. பரிசளிப்பதற்கு ஏற்ற நூல்கள். (49758)

## தென்மராட்சி விவசாயிகளுக்குக் கடன்

நெல்லியடி, செப். 23

தென்மராட்சிப் பகுதி விவசாயிகளின் நலன் கருதி விவசாயிகளுக்கு கடன் வழங்கும் திட்டம் நடைமுறைப் படுத்தப்படவிருக்கின்றது.

இது சம்பந்தமான கலந்துரையாடல் எதிர் வரும் 27 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு தென்மராட்சியிலுள்ள அறவழிப் போராட்டக் குழு தலைமைப் பணிமனையில் தலைவர் வி. ஜி. தங்கவேல் தலைமையில் நடைபெறும். (இ–109)

## தேவை

வெற்று சமையல் வாயு சிலிண்டர்கள் கொள்வனவு செய்யப்படும்.

B. பாலசுப்பிரமணியம்
(சாக்கு வியாபாரம்)
400, கே. கே. எஸ் வீதி,
(புதிய இல. 576)
யாழ்ப்பாணம்.

(49792)

## அலுவலக உதவியாளர் (பியோன்) தேவை

வேலை நாள்களில் பி. ப 2 00–4 00 மணி வரை நேரில் வரவும்.

**பாரதி பதிப்பகம்**
430, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்

[49788]

---

உ

யா / உரும்பிராய்

## சைவத்தமிழ் வித்தியாலயம்

# பரிசளிப்பு விழா

தலைவர்: **திரு. அ. ஈஸ்வரநாதன்** அவர்கள் (அதிபர்)

இடம்: **சைவத்தமிழ் வித்தியாலயம், திறந்தவெளி அரங்கு**

காலம்: **23 - 09 - 1997 செவ்வாய்க்கிழமை** பி. ப. 3-00 மணி

பிரதம விருந்தினர்:
திரு. சி. சிவராஜா அவர்கள்
[கல்விப் பணிப்பாளர், வலயம்-2]

கௌரவ விருந்தினர்:
திரு. அ. ராஜேந்திரம் அவர்கள்
[கோட்டக்கல்வி அலுவலர், கோப்பாய்]

சிறப்பு விருந்தினர்:
வைத்திய கலாநிதி செ. இந்திரராஜா அவர்கள்

### ★ நிகழ்ச்சி நிரல் ★

★ தேவாரம்
★ தமிழ்மொழி வாழ்த்து
★ பாடசாலைக் கீதம்
★ வரவேற்புரை — திரு. க. ஆனந்தராசா அவர்கள் [ஆசிரியர்]
★ பரிசு நாள் அறிக்கை — அதிபர்
★ பேச்சு [தமிழ்] — செல்வி சி. சுகிர்தா
★ பேச்சு [ஆங்கிலம்] — செல்வி பா. யுஷந்தி
★ வாழ்த்துரை — ஆசிரியமணி அ. பஞ்சாட்சரம் அவர்கள் [காரியதரிசி, பாடசாலை அபிவிருத்திச் சங்கம்]
★ சிறப்பு விருந்தினர் உரை
★ கௌரவ விருந்தினர் உரை
★ பிரதம விருந்தினர் உரை
★ பரிசு வழங்குதல்
★ நன்றியுரை — திரு. ச. செல்வரத்தினம் அவர்கள் [ஆசிரியர்]

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அதிபர், பகுதித் தலைவர்கள்,
ஆசிரியர்கள், மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர்.

சைவத்தமிழ் வித்தியாலயம்,
உரும்பிராய்.

விளம்பர அன்பளிப்பு:-

**தென்றல் தையல் அகம்**
உரும்பிராய்ச் சந்தி.

(49794)

---

## 10-வது ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 30 — 03 — 1933

உதிர்வு: 24 — 09 — 1987

### சவிரியான் மேரியம்மா

''ஆண்டவருக்குள் மரிப்போர் பேறுபெற்றோர் ஏனெனில் அவர்கள் தம் உழைப்பினின்று இளைப்பாறுவர்'' — திருவெளிப்பாடு 14—13

கருணை நிறையேசுவே! ஆத்துமங்களை நேசிப்பவரே தேவரீருடைய திருஇருதயமானது பூங்காவனத்திலும் சிலுவையிலும் பட்ட அவஸ்தையையும் தேவரீருடைய மாசில்லாத திருத்தாயானவள் அனுபவித்த வியாகுலங்களையும் பார்த்து மரித்த விசுவாசியாகிய சவிரியான் மேரியம்மா அவர்களின் பேரில் அதிக இரக்கம் வைத்து அவருக்கு நித்திய இளைப்பாற்றியை அளித்தருளும்.

இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக யாழ். புனித மரியன்னை பேராலயத்தில் 24-9-97 புதன்கிழமை காலை 6 மணிக்கு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். (திருப்பலி முடிந்ததும் வீட்டிற்கு வரவும்)

பிரிவால் துயருறும்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

8/1, மத்தியகிழக்கு வீதி,
குருநகர்,
யாழ்ப்பாணம்.

---

சர்வதேச முதியோர் தினத்தில்

## 90 வயதுக்கு மேற்பட்டோரை லயன்ஸ் கழகம் கௌரவிக்கும்

தென்மராட்சி செப். 23

சர்வதேச முதியோர் தினத்தையொட்டி, சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர், தென்மராட்சிப் பிரதேசத்தில் உள்ள 90 வயதுக்கு மேற்பட்ட வயோதிபர்களை கௌரவிக்கும் விழாவை ஒக்ரோபர் 7 ஆம் திகதி சாவகச்சேரியில் நடத்தவுள்ளனர்.

1907 ஆம் ஆண்டுக்கு முன்னர் பிறந்த தென்மராட்சி பிரதேசத்தை சேர்ந்தவர்களின் பெயர்களை ஒக்ரோபர் 5 ஆம் திகதிக்கு முன்னர் சாவகச்சேரி லயன்ஸ் கழக அலுவலகத்தில் பதிவு செய்து கொள்ளுமாறு கழகச் செயலாளர் எம். கே. ஜீவகதாஸ் அறிவித்துள்ளார். (இ - 117)

---

## எமது புதிய வெளியீடு

பொலிஸ் ஸ்டோரி புகழ் சாய்குமாரின்
**அக்னி IPS** (தரமான பிரதி)
வருண்ராஜ் நடித்த
★ **கங்கை கரை பாட்டு**

**வீடியோ விமல்**
யாழ்ப்பாணம்.

(49796)

---

மருத்துவபீட மாணவர் ஒன்றியம்

## மாணவர் பொதுக்கூட்டம்

மேற்படி ஒன்றியத்தினால் இன்று செவ்வாய்க்கிழமை (**23-09-1997**) பி. ப. 3-30 மணிக்கு மருத்துவபீட விரிவுரை மண்டபத்தில் நடத்தப்படும். சில முக்கிய விடயங்கள் பற்றி ஆராய இருப்பதனால் அனைத்து மாணவர்களையும் தவறாது சமுகம் தரும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

தலைவர்,
மருத்துவபீட மாணவர் ஒன்றியம்.

(49785)

---

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் முன்னாள் உப அதிபர்

**உயர்திரு ஆறுமுகம் தம்பையா**

அவர்களின் மறைவினால் துயருறும் குடும்பத்தினர்க்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரது ஆன்மா சாந்தியடையவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் கழகம்,
யா/தேவரையாளி இந்துக் கல்லூரி,
கரவெட்டி.

(49797)

---

## ஓராண்டு நினைவலைகள்



இம்மையில்: 10 — 02 — 1970

மறுமையில்: 23 — 09 — 1996

### அமரர் அருளானந்தம் அலெக்சாந்தர் (அருள்)

ஆண்டொன்று சென்றாலும்
ஆறாது எம்துயரம்
மண்வாழ்வை விட்டு நீ
மறைந்தாயே வெகுவிரைவில்
விண்வாழ்வில் என்றென்றும்
வீற்றிருக்க வேண்டுகின்றோம்.
ஆண்டவரை வணங்குகிறோம்
ஆறாத துயரோடு.

வேதனையில் வாடும்;

தந்தை, சகோதர, சகோதரிகள்.

பரு. வீதி,
நெல்லியடி, கரவெட்டி.

(சி–1613)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## மறுபரிசீலனை ஆகாதா?

அரசாங்கம் இந்த வருடத்துக்கு (1997) பாதுகாப்புச் செலவுக்கென ஒதுக்கிய நிதி 4,800 கோடி ரூபாவாகும். ஆனால் கடந்த சில மாதங்களில் மட்டும் பாதுகாப்புக்கு 4,400 கோடி ரூபா செலவாகியதாகப் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்திருக்கின்றார்.

வரவு - செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்படும் நிதியைவிட மிக அதிகமான பணம் பாதுகாப்புக்கு — போருக்கு — செலவாகிறது என்பது ஒன்றும் புதினம் அல்ல. அந்த மேலதிகச் செலவுக்கென நாடாளுமன்றத்தில் வருடத்தில் பல தடவைகள் குறைநிரப்புப் பிரேரணைகள் நிறைவேற்றப்படுவதும் வழமையாகிவிட்டது.

வவுனியாவிலிருந்து கிளிநொச்சிக்குத் தரை வழிப் பாதையைத் திறப்பதற்காக ஆரம்பிக்கப்பட்ட ''ஜெயசிக்குறு'' இராணுவ நடவடிக்கை தொடங்கப்பட்டு 132 நாள்கள் கழிந்து விட்டன — நான்கரை மாதங்களாகின்றன. குறிப்பிட்ட இராணுவ நடவடிக்கைக்காக மட்டும் நாள் ஒன்றுக்கு 24 லட்சம் ரூபா செலவாகுவதாக மதிப்பிடப்படுகிறது!

ஆகையால் இவ்வருடத்துக்கென வரவு - செலவுத்திட்டத்தில் ஒதுக்கப்பட்ட நிதியைவிட இரண்டு மடங்கு இதுவரை பாதுகாப்புச் செலவாகக் கரைந்திருக்கும் என்று இலகுவாக நம்பலாம்.

இதனைப் பாதுகாப்புப் பிரதி அமைச்சரோ, ஜனாதிபதியோ, ஏனைய அரச பிரமுகர்களோ உணராமல் இருக்க நியாயமில்லை.

தேசிய வளங்களைப் பாதுகாக்கும் முகமாக இத்தகைய போர் நிலைமை மீண்டும் தோன்றுவது தடுக்கப்பட வேண்டும் என்று ஜெனரல் அனுருத்த ரத்வத்தை கூறியிருப்பதும் —

போருக்காக பணம் செலவாகிக் கொண்டிருப்பினும், அபிவிருத்தி நடவடிக்கைகளுக்குக் குந்தகம் ஏற்படாமல் அரசு பார்த்துக் கொள்வதாக ஜனாதிபதி பேசியிருப்பதும் —

போர் நாட்டின்நிதி வளத்தை மட்டுமன்றி, மனிதவளம் உட்பட்ட ஏனைய வளங்களையும் விழுங்குவதை அவர்கள் உணர்வதனையே தெளிவாகப் புலப்படுத்துகின்றன.

ஆயினும் போரை நிறுத்துவது குறித்து ஜனாதிபதியும் அரசினரும் அக்கறைப்படுவதற்கான அறிகுறிகள் எதனையும் காண முடியவில்லை.

வவுனியா - கிளிநொச்சி வீதி கூடிய விரைவில் விடுதலைப் புலிகளின் பிடியிலிருந்து விடுவிக்கப்படும் என்று ஜெனரல் அனுருத்த ரத்வத்தையும் —

போர் அடுத்த வருடத்திற்குள் முடிவுக்கு வந்து விடும் என்று ஜனாதிபதி சந்திரிகாவும் — கூறியுள்ளனர்.

மக்கள் நலன் கருதி, நாட்டு நலன் கருதி, அதன் வளங்களைப் பேணி அபிவிருத்தியை முன்னெடுப்பதில் அக்கறை இருப்பின், போர் நிறுத்தப்பட வேண்டும். அது முடியும் வரை காலத்தைக் கழித்துக் காத்திருக்க வேண்டியதில்லை,

போரை நிறுத்துவது என்பது வேறு; அதனை முடிவுக்குக் கொண்டு வருவது என்பது வேறு. அரசுக்கு வெற்றி கிடைத்த பின்னர் அல்லது பேச்சுவார்த்தை தொடங்கினாலேயே போரை முடிவுக்குக் கொண்டு வரலாம்.

போரை முடிவுக்குக் கொண்டு வந்த பின்னரே பேச்ச்வாத்தை மூலம் தீர்வு என்றும் அமைச்சர் ரத்வத்தை பகர்ந்துள்ளார்.

அது வரை மக்களும் அழிந்து, நாட்டின் வளங்களும் தேய்ந்து போக வேண்டுமா? அரசு இது குறித்து மறுபரிசிலனை செய்யக் கூடாதா?

# பொது காப்புறுதி வழங்கும் பணிகள் மீண்டும் ஆரம்பம்

யாழ்ப்பாணம், செப். 23

யாழ்ப்பாணத்தில் பொதுக் காப்புறுதி வழங்கும் வேலைகள் கடந்த திங்கட்கிழமை முதல் மீண்டும் ஆரம்பமாகியுள்ளன.

இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் யாழ். பிராந்திய அலுவலக முகாமையாளர் திருமதி அரியநாயகம் இத்தகவலைத் தெரிவித்தார்.

கடந்த 7 வருடங்களாக குடாநாட்டு மக்கள் பொதுக் காப்புறுதி செய்ய முடியாமல் இருந்தனர்.

யுத்த நிலைமை காரணமாக கலவரங்கள் தொடர்பான இழப்பீடு வழங்குவதை அரசு இங்கு தடை செய்திருந்தது.

தற்போது யாழ் மாவட்டத்தில் சிவில் நிர்வாகம் நடைமுறைக்கு வந்துள்ளது. அத்துடன் புனர்வாழ்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளப்படவேண்டிய தேவையுள்ளதால் மீண்டும் பொதுக்காப்புறுதி வழங்கும் வேலைகளை ஆரம்பிக்க ஜனாதிபதியின் உத்தரவின் பேரில் காப்புறுதி கூட்டுத்தாபன பணிப்பாளர் அனுமதி வழங்கியுள்ளார்.

இக் காப்புறுதிகளுக் குரிய படிவங்கள் கொழும்பிலிருந்து இங்கு கொண்டுவரப்பட்டுள்ளன.

இதேவேளை — காப்புறுதி நடவடிக்கைகளை முழு அளவில் செயற்படுத்த ஆளணியினர் பற்றாக்குறையாக இருந்ததால் காப்புறுதிக் கூட்டுதாபன யாழ். பிராந்திய அலுவலகத்துக்கு புதிதாக எட்டுப் பேர் நியமிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-5-9)

## கடல் அபாயக் காப்புறுதி செய்ய முடியாத நிலையில் யாழ். மீனவர்

யாழ்ப்பாணத்தில் தற்போது அமுலில் உள்ள கடல் வலயத் தடை காரணமாக கடல் அபாயக்காப்புறுதி செய்ய முடியாத நிலையில் கடற்றொழிலாளர்கள் உள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

கடற்றொழிலாளர்கள் வங்கிகளில் கடன் பெறுவதற்கு அவர்கள் கடல் அபாயக்காப்புறுதி செய்திருத்தல் அவசியம் என்று —

காப்புறுதி செய்ய முடியாமல் இருப்பதால் அவர்கள் வங்கிகளில் கடன் பெற முடியாதுள்ளதாகவும் இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபன யாழ். பிராந்திய அலுவலக முகாமையாளர் திருமதி அரியநாயகம் தெரிவித்தார். (ஐ-5 9)

## இளைப்பாறிய கூட்டுறவு பரிசோதகர் சேவைக்கு

யாழ். மாவட்டத்தில் கூட்டுறவுப் பரிசோதகர் பற்றாக் குறை நீடிக்கிறது.

இதனை நிவர்த்தி செய்ய இளைப்பாறியுள்ள கூட்டுறவுப் பரிசோதகர்களும் கூட்டுறவு உயர்கல்வி சான்றிதழ் பெற்றோரும் சேவைக்கு அழைக்கப்படவுள்ளனர்.

இவர்களுக்கான கொடுப்பனவுகள் அந்தந்த கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் வழங்கப்படும்.

யாழ். மாவட்டத்தில் முன்னர் 130 கூட்டுறவுப் பரிசோதகர்கள் சேவையில் இருந்தனர்.

தற்போது 26 பேரே கடமையாற்றுவதால் கூட்டுறவுச் சங்கங்களின் எண் பார்வைகள் கடந்த நான்கு வருடங்களாக நடத்தப்படவில்லை என தெரிவிக்கப் பட்டது. (இ-117)

## தமிழ் வர்த்தகர் வவுனியாவில் கைது

கொழும்பு, செப். 23

கொழும்பிலும் மற்றும் சுற்றுப் பகுதிகளிலும் விடுதலைப் புலிகளின் செயற்பாடுகளுக்கு உதவி வழங்கி வந்ததாகச் சந்தேகிக்கப்படும் தமிழ் வர்த்தகர் ஒருவரை வவுனியாவில் வைத்து பொலீஸார் கைது செய்திருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

''கொப்பேகடுவ'' என்ற பெயரில் இந்த வர்த்தகர் நடமாடி வந்தார் என்றும் —

வடக்கில் இருந்து புலிகள் ஆயுதங்களைக் கொழும்புக்குக் கொண்டு செல்ல இவர் உதவியுள்ளார் என்றும் சந்தேகிக்கப் படுவதாகவும் — பொலீஸார் தெரிவித்தனர். (ஐ-3-150)

## வியாழனன்று மன்னாருக்கு இரு கப்பல்கள் சேவை

யாழ்ப்பாணம், செப். 23

காங்கேசன்துறையிலிருந்து மன்னாருக்கு நாளை மறுதினம் வியாழக்கிழமை 600 பயணிகளுடன் இரு கப்பல்கள் சேவையில் ஈடுபடவிருப்பதாக யாழ். சிவில் நிர்வாக அலுவலகம் நேற்று மாலை அறிவித்தது.

'' தராகி '', '' குட்வில் கைட் '' ஆகிய இரு கப்பல்களே சேவையில் ஈடுபடவிருப்பதாகவும் —

சிவில் நிர்வாக அலுவலகத்தில் பதிவு செய்தவர்களில் அனுமதி பெற்ற பட்டியல்களில் உள்ளவர்கள் இன்று தமது அலுவலகத்தில் பெயர்களைப் பதிவுசெய்து பயணத்தை உறுதி செய்யுமாறும் — யாழ். சிவில் நிர்வாக அலுவலகம் கேட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை முதல் இச்சேவை இடைநிறுத்தப் பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ-3)

## சர்வதேச பிரதிநிதிகள் இன்று யாழ். வருகை

யாழ்ப்பாணம், செப். 23

கொழும்பிலுள்ள ஆஸ்திரேலியத் தூதரின் அலுவலகத்தைச் சேர்ந்த மூன்று அதிகாரிகள் இன்று யாழ்ப்பாணம் வரவுள்ளனர்.

விமானம் மூலம் இன்று பலாலி வந்துசேரும் இந்த அதிகாரிகள் குடாநாட்டின் பல பகுதிகளுக்குச் சென்று அபிவிருத்திச் செயற்பாடுகள் குறித்து ஆராய்வார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கொக்குவில் தொழில் நுட்பக் கல்லூரிக்கு ஆஸ்திரேலிய அரசாங்கம் வழங்கவுள்ள உதவிகள் குறித்தும் இவர்கள் நேரில் ஆராய்வார்கள்.

இதே வேளை — அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம், ஐ. நா. அபிவிருத்தித் திட்டம், உணவு, விவசாயத் திட்டம் ஆகிய நிறுவனங்களின் பிரதிநிதிகளும் இன்று யாழ்ப்பாணம் வருகின்றனர்.

இவர்கள் தமது நிறுவனங்களின் [illegible] களைப் பார்வையிடுவர். (ஐ-3)

## கருத்தரங்கு

தென்மராட்சி, செப். 23

தென்மராட்சி கல்விக் கோட்ட பாடசாலை அதிபர்களுக்கான கருத்தரங்கு நாளை புதன்கிழமை சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் கோட்டக்கல்வி அலுவலர் இ. கணேசன் தலைமையில் நடைபெறும். (ஐ-117)

## அனுராதபுரத்தில் ஓட்டோ கடத்தல்

அனுராதபுரம் புதிய பஸ் நிலையத்துக்கு அருகில் ஓட்டோ ஒன்றைக் கடத்திய இனந்தெரியாத கும்பல் ஒன்று புதிய பஸ் தரிப்புநிலையத்துக்கு சமீபமாக உள்ள பெற்றோல் நிலையத்திலிருந்து 40 ஆயிரம் ரூபாவுடன் ஓட்டோவில் தப்பிச் சென்றது.

ஓட்டோவின் சாரதி விடுவிக்கப்பட்டதாக தகவல்கள் தெரிவித்தன. (ஐ-9)

## தொழில்நுட்ப பயிலுநர் பரீட்சை

## தாமதமாகக் கிடைத்த அழைப்புக் கடிதங்கள்

தென்மராட்சி, செப். 23

சுகாதாரத் திணைக்களத்துக்கு தொழில் நுட்பவியல் பயிலுநர்களைச் சேர்த்துக் கொள்வதற்காக நாளை புதன்கிழமை கொழும்பில் நடைபெறவுள்ள நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுமாறு கோரும் கடிதங்கள் குடாநாட்டைச் சேர்ந்த விண்ணப்பதாரர்களுக்கு நேற்றுக் கிடைத்ததால் நேர்முகப் பரீட்சைக்கு செல்லமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

சுகாதாரத் திணைக்களத்தில் உள்ள 14 பிரிவு தொழில் நுட்பவியல் பயிலுநர்களைச் சேர்த்துக் கொள்வதற்கு விண்ணப்பித்தவர்களை நாளை கொழும்பில் நடைபெறும் நேர்முகப் பரீட்சையில் கலந்து கொள்ளுமாறு கோரி கடந்த மாதம் 27ஆம் திகதி அனுப்பப்பட்ட கடிதங்கள் நேற்று சில விண்ணப்பதாரர்களுக்குக் கிடைத்துள்ளன.

ஒரு நாள் இடைவெளியில் இக கடிதம் கிடைத்ததால் தற்போதைய சூழ்நிலையில் கொழும்புக்குச் செல்வதற்கான ஆயத்தங்கள் ஏதுமற்ற நிலையில் உள்ள விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சையை வேறு ஒரு திகதிக்கு ஒத்திவைக்குமாறு கோரியுள்ளனர். (ஐ-117)

## விளையாட்டு நிகழ்வுகள்

தென்மராட்சி, செப். 23

தென்மராட்சி கல்விக் கோட்டப்பாடசாலைகளுக்கிடையே நடத்தப்பட்ட கனிஷ்ட, இடைநிலை, சிரேஷ்ட பிரிவுகளின் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டிகள் நாளை புதன்கிழமை பி.ப. 2மணி தொடக்கம் சாவகச்சேரி நகரசபை பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெறும். முதன்மை விருந்தினராக சாவகச்சேரி நகரசபை செயலாளர் சி. நடராசா கலந்து கொள்வார்.

இறுதிப்போட்டிகளில் கலந்து கொள்ளும் பாடசாலைகளின் விவரம் வருமாறு:-

கனிஷ்ட பிரிவு

★ மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய ம.வி. எதிர் நாவற்குளி ம.வி.

இடைநிலைப் பிரிவு

★ நாவற்குளி ம.வி. எதிர் சாவகச்சேரி இந்து.

சிரேஷ்ட பிரிவு

★ கச்சாய் அ.த.க. பாடசாலை எதிர் சாவகச்சேரி இந்து.

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், செப்.23

மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலய பரிசில் நாள் எதிர்வரும் 27 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு வித்தியாலய அரங்கில் டைபெறவுள்ளது.

அதிபர் கு. சிவானந்தம் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் முதன்மை விருந்தினராக யாழ். வலயம் 1 கல்விப் பணிப்பாளர் சு. இரத்தினராசா கலந்து கொள்வார்.

திருமதி யோ. இரத்தினராசா பரிசில்களை வழங்குவார். (இ-9)

## கூட்டுறவுச் சங்க முகாமையாளர் கைதாகி பிணையில் விடுவிப்பு

யாழ்ப்பாணம், செப். 23

பண்டத்தரிப்பு பலநோக்குக் கூட்டுறவுச்சங்க முகாமையாளர் சுன்னாகம் பொலீஸாரால் தடுத்து வைக்கப்பட்டிருந்து நேற்று நீதிமன்றத்தில் ஆஜர் செய்யபப்பட்ட பின்னர் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

சம்பவம் பற்றிக் கூறப்படுவதவாது:-

கடந்த வியாழக்கிழமை மேற்படி சங்கத்திலிருந்து சுமார் 50 மூடை அரிசி தனியார் ஒருவரால் கொள்வனவு செய்யப்பட்டு வேறு கடைகளுக்கு விற்பதற்காக லான்ட்மாஸ்ரர் ஒன்றில் ஏற்றப்பட்டு கொண்டு வரப்பட்டது.

இந்த லான்ட்மாஸ்ரரில் சம்பந்தப்பட்ட முகாமையாளரும் உடன் இருந்ததாகவும் கூறப்படுகின்றது.

பொலீஸார் இந்த அரிசி மூடை கொள்வனவு தொடர்பான பற்றுச்சீட்டை கேட்டபோது பற்றுச்சீட்டு சமர்ப்பிக்கப்படவில்லை எனவும் —

இதன் காரணமாக முகாமையாளர் உட்பட மூவர் பொலீஸாரால் தடுத்து வைக்கப்பட்டனர் என்றும் — மேலும் தெரிவிக்கப்பட்டது,

சட்டத்தரணி எஸ். என். விஸ்வலிங்கம் இவர்களுக்காக நேற்று யாழ். நீதிமன்றத்தில் ஆஜரானார். (உ-5-9)

**நாளை**

**புரட்டாதி 8**

புதன்கிழமை

திதி: அட்டமி

பிற்பகல் 12 39 வரை.

நட்சத்திரம்: திருவாதிரை

பின் இரவு 1.33 வரை

சுபநேரம்: 4 32-6.02

ராகுகாலம்: 12 02 1 32

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கூட்டுறவுச் சங்கங்களுக்கு நஷ்டஈடு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்

## மாகாண ஆணையாளர் தெரிவிப்பு

நெல்லியடி, செப். 23

''கடந்தகால போர் அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டிருக்கும் யாழ். மாவட்டத்திலுள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு, புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சிடமிருந்து நஷ்டஈடு பெற நடவடிக்கை எடுக்கப்படும்.

கடந்த சனிக்கிழமை காலை, யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபையில் இடம்பெற்ற பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்கள், உயரதிகாரிகளுக்கான கலந்துரையாடலின்போது, வடக்கு கிழக்கு மாகாண கூட்டுறவு ஆணையாளர் எஸ். சண்முகலிங்கம் இவ்வாறு தெரிவித்தார்.

கூட்டுறவு உதவிப் பணிப்பாளர் சண்முகநாதன் தலைமையில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் ஆணையாளர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்தகால போர் அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டு நலிவுற்றிருக்கும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் பாதிப்புகள் பற்றிய விவரக் கொத்தை தனித் தனியாக அனுப்பி வைக்கவேண்டும்.

இது தொடர்பாக கொழும்பிலுள்ள புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சின் உயரதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு பாதிக்கப்பட்ட பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு மக்கள் வங்கி ஊடாக குறைந்த விகித வட்டியில் அதிகளவு தொகையை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். இது தொடர்பாக கூட்டுறவுத் திணைக்களப் பணிப்பாளர், கொழும்பு கூட்டுறவுத் திணைக்களப் பணிப்பாளர் ஆகியோருடனும் மக்கள் வங்கிப் பணிப்பாளர்களுடனும் தொடர்பு கொண்டு நடவடிக்கை மேற்கொள்வேன் — என்றார்.

(ஐ-109)

## கருத்தரங்கு

தென்மராட்சி, செப். 23

அரசாங்கத்தினால் முன்வைக்கப்பட்ட அரசமைப்புத் திட்டம் பற்றிய விளக்கக் கருத்தரங்கு இன்று பி. ப. 2.00 மணிக்கு கொடிகாமம் திருநாவுக்கரசு வித்தியாலயத்தில் நடைபெறும்.

(ஐ-117)


எமது நேற்றைய புதிய வெளியீடுகள்!

ராம்கி, சங்கவி, கவுண்டமணி

★ ஆஹா என்ன பொருத்தம்

சாய்குமார், ரஞ்சிதா சரோஜாதேவி

★ அக்னி IPS

சுப்பஸோ வீடியோ யாழ்ப்பாணம்.

Note:- புதிய படப் போஸ்டர்கள் மலிவு விலையில்.

(சி/1618)


## கிராம அலுவலரை காணவில்லை

கொழும்பு, செப். 23

இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டதாகக் கூறப்படும் கிராம சேவையாளர் ஒருவர் கிழக்கில் காணாமற்போயுள்ளார்.

திருமலிங்கம் என்ற திகிலிவட்டைப் பகுதி கிராம சேவையாளரே. காணாமற்போனவராவார். திருமணம் முடித்து 7 நாள்களின் பின்னர் இவர் படையினரால் கைது செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ)

## பத்மநாதனின்...

(முதலாம் பக்கத்தொடர்)

மனுவின் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி ஜி. விஜேதிலக, சட்டத்தரணி சிவலோகநாதன் ஆகியோர் சட்டத்தரணி கே. வி. தவராஜாவின் அனுசரணையுடன் ஆஜரானார்கள்.

அரசுத் தரப்பில் சிரேஷ்ட சட்டத்தரணி ஷிமித்ரா பெர்னாண்டோ ஆஜரானார். (உ-ஐ)

## மது...

(முதலாம் பக்கத் தொடர்)

இது தவிர மட்டக்களப்பில் உள்ள வேறு 17 மது விற்பனை நிலையங்களை மதுவரித் திணைக்கள அதிகாரிகள் மூடி சீல் வைத்தனர்.

அந்த 17 நிலையங்களுக்கும் மது விற்பனை செய்வதில் விதிக்கப்பட்டிருந்த தடையே தற்போது நீக்கப்பட்டிருக்கிறது. (ஐ-21)

## கோழித் திருட்டு அதிகரிப்பு

வடமராட்சி, செப். 23

தென்புலோலியில் கோழித் திருட்டு அதிகரித்துள்ளது.

இப்பகுதியிலுள்ள வீடு ஒன்றில் முன்னிரவில் வீட்டு வளவுக்குள் புகுந்த இனம் தெரியாத திருடர்கள் அங்கு கோழிக் கூட்டிலிருந்த கோழிகளைக் களவாடிச் சென்றுள்ளனர்.

(ஐ-173)

## வவுனியாவில் மேல் நீதிமன்றம் ஆரம்பம்

கொழும்பு, செப். 23

வவுனியாவில் புதிதாக அமைக்கப்பட்ட மேல் நீதிமன்றத்தை சட்டமா அதிபர் சரத் என். சில்வா நேற்றுக் காலை திறந்து வைத்தார்.

வவுனியா நீதிமன்றக் கட்டடத்திலேயே இந்த மேல் நீதிமன்றமும் அமைந்துள்ளது. (ஐ)

## கல்முனையில்...

(முதலாம் பக்கத் தொடர்)

இடத்தில் வைத்துச் சுடப்பட்டார்.

புலிகளே இவரைச் சுட்டதாகக் கல்முனைப் பொலிஸார் தெரிவித்தனர்.

படுகாயமுற்ற ஊர்காவலர் பின்னர் ஆஸ்பத்திரியில் உயிரிழந்தார்.

இந்தச் சம்பவத்தை அடுத்து கல்முனையில் பெரும் பதற்றம் ஏற்பட்டது. பொலிஸார் உடனடியாக ஊரடங்கு உத்தரவை நடைமுறைக்குக் கொண்டு வந்தனர்.

எனினும் நேற்று முன்னிரவு வரை கல்முனைப் பகுதியில் பெரிய அசம்பாவிதங்கள் ஏதும் இடம்பெறவில்லை. அமைதி நிலை தொடர்ந்தால் இன்று காலை ஐந்து மணியுடன் ஊரடங்கு உத்தரவு விலக்கப்படும் என நேற்று மாலை தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதற்கிடையில் உயிரிழந்த ஊர்காவலரின் ஜனாஸா ஊரடங்கு உத்தரவுக்கு மத்தியில் - நேற்று மாலை 4-30 மணியளவில் கல்முனைக்குடி மையவாடியில் அடக்கம் செய்யப்பட்டது.

கல்முனைக்கு அப்பால் மருதமுனைப் பகுதியில் சரியாக ஒரு வருடத்துக்கு முன்னர் இதே காலப்பகுதியில் நான்கு ஊர்காவலர்கள் சுட்டுக்கொல்லப்பட்டதை அடுத்து தமிழர்-முஸ்லிம்கள் கலவரம் வெடித்ததும்—

அக் கலவரங்களின் போது 15 இற்கும் அதிக தமிழர்கள் சுட்டும், வெட்டியும் கொல்லப்பட்டு [illegible] கள் எரிக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. [illegible]

## செய்தியாளர்கள் தேவை

உதயன் - சஞ்சீவி பத்திரிகைகளின் பிரதேசச் செய்தியாளர்களாகப் பணிபுரிவதற்கு இத்துறையில் ஆர்வமும், ஆற்றலும் உடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

ஜி.சீ.ஈ. உயர்தரத் தராதரமும், தமிழில் நன்கு தேர்ச்சியும், ஆங்கில அறிவும் உடையவர்கள் விண்ணப்பிக்கலாம்.

குறிப்பிட்ட பிரதேசத்தில் நிரந்தரமாக வசிக்க வேண்டும், துடிப்பும், சமூகத் தொடர்புகளும் உள்ளவர்களுக்கே முன்னுரிமை வழங்கப்படும்.

வயது எல்லை: **22 — 55**

விண்ணப்ப முடிவு திகதி: **30 - 09 - 1997**

விண்ணப்பம் சொந்தக் கையெழுத்தில் பூரண சுயவிவரங்களுடன் அனுப்பப்பட வேண்டும்.

பின்வரும் பிரதேசங்களுக்குச் செய்தியாளர்கள் தேவைப்படுகிறார்கள்.

1. அளவெட்டி
2. சுன்னாகம்
3. ஏழாலை
4. கொக்குவில்
5. காரைநகர்
6. நீர்வேலி
7. சண்டிலிப்பாய்
8. உடுப்பிட்டி
9. ஊர்காவற்றுறை
10. சங்கானை
11. இளவாலை
12. கோப்பாய்
13. மூளாய்
14. பண்டத்தரிப்பு
15. வல்வெட்டித்துறை

பிரதம ஆசிரியர்,
உதயன் - சஞ்சீவி,
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகமனையில் 23- 09 - 97 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

## செஞ்சிலுவைச் சங்க சின்னம் மாற்றப்படும்?

லண்டன், செப். 23

உலகளாவிய ரீதியில் புகழ்பெற்ற தொண்டு நிறுவனமான செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு தனது செஞ்சிலுவைச் சின்னத்தை மாற்றுவது குறித்து ஆலோசித்து வருகிறது.

செஞ்சிலுவைச் சின்னத்தை நீக்கிவிட்டு நாகரிக ரீதியில் நடுநிலைமையான அறுகோணவடிவுடைய அல்லது முக்கோண வடிவுடைய அல்லது சாய்சதுர வடிவுடைய சிவப்பு நிறத்திலான புதிய சின்னம் ஒன்றை வரைவது குறித்து ஆலோசிக்கப்பட்டுள்ளது,

முஸ்லிம்கள் மற்றும் யூத சமூகத்தினரும் ஏற்றுக்கொள்ளக் கூடிய சின்னம் ஒன்றை அமைப்பதை நோக்கமாகக் கொண்டே இம் மாற்றம் செய்யப்படவுள்ளது.

134 ஆண்டுகள் பழைமை வாய்ந்த செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் தற்போதைய சின்னமான செஞ்சிலுவையும், அதன் இஸ்லாமியக் குறியீடான செம்பிறையும் உலகளாவிய ரீதியில் அடையாளம் காணப்பட்டவையாகும்.

கலாசார மற்றும் மதக் காரணங்களால் இவ்விரு சின்னங்களும் உலகின் சில சமூகத்தவர்களால் மதிக்கப்படாதவையாக இருக்கின்றன என்ற கருத்து நிலவுவதை அடுத்தே இந்த மாற்றம் குறித்து ஆலோசிக்கப்படுகிறது.

செஞ்சிலுவை மற்றும் செம்பிறைச் சின்னங்களுக்கு ஆட்சேபனை தெரிவித்த நாடுகளில் இஸ்ரேலும் அடங்கும்,

சின்னத்தை மாற்றுவது தொடர்பான செயற்குழுவின் பரிந்துரைகளை 172 நாடுகளின் கிளை அமைப்புகள் எதிர்வரும் நவம்பரில் விவாதிக்கவுள்ளன. (ஐ)

## வவுனியா இரவு ரயிலில் கொள்ளையர்கள் கைவரிசை

வவுனியா, செப். 23

கொழும்பில் இருந்து வவுனியாவுக்கு சேவையில் ஈடுபடும் இரவு தபால் ரயிலில் பயணம் செய்யும் பயணிகளிடம் கொள்ளைக் கோஷ்டிகள் தங்கள் கைவரிசையைக் காட்டி வருவதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

பயணிகளின் நகைகள், ரொக்கப்பணம் மற்றும் உடைமைகள் கொள்ளையடிக்கப்படும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன.

ராகம, மாஹோ, சாலியபுர போன்ற தென்பகுதி ரயில் நிலையங்களில் ரயில் தரித்து நிற்கும் சமயங்களிலேயே கொள்ளையர்கள் தங்கள் கைவரிசையைக் காட்டி வருகின்றனர்.

(ஐ)

## மல கூடங்கள் அமைக்கும் பணி அராலி மேற்கில் ஆரம்பம்

வட்டுக்கோட்டை, செப். 23

அராலிமேற்கு கோட்டைக்காடு கிராமத்தில் 'யூனிசெவ்' உதவித் திட்டத்தின் கீழ் 100 மலசல கூடங்களை அமைக்கும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. பயனாளிகளின் பங்களிப்புடன் 20 மலசல கூடங்கள் தற்போது அமைக்கப்பட்டு வருகின்றன. தொடர்ந்துமிகுதி 80 மலசல கூடங்களும் அமைக்கப்படும். மேற்படி நிறுவனம் புதிய 100 மலசல கூடங்களை அமைப்பதற்கு பதினைந்து இலட்சம் ரூபாவை ஒதுக்கியுள்ளது.

இதேவேளை —

சங்கானை அரசாங்க வைத்தியசாலையில் நாற்பது இலட்சம் ரூபா செலவில் மகப்பேற்று நிலையமும், வட்டுக்கோட்டை அரசாங்க கிராமிய வைத்தியசாலையில் பத்து இலட்சம் ரூபா செலவில் பற்சிகிச்சை நிலையமும் அமைக்கும் வேலைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

(ஐ-12)

## நாய்களை ஒழிக்கும் மருந்து இல்லை

செம்பியன்பற்று, செப். 23

வடமராட்சிப் பகுதியில் கட்டாக்காலி நாய்களின் தொல்லை அதிகரித்துள்ள போதிலும் நாய்களைக் கொல்வதற்கான நச்சு மருந்து கொழும்பில் இருந்து அனுப்பப்படாததால் கட்டாக்காலி நாய்களைப் பிடித்து அழிக்க முடியாமல் இருப்பதாக பருத்தித்துறை பிரதேச சபை செயலர் ச. செவ்வந்திநாதர் தெரிவித்தார்.

(ஐ-36)

## ஜெயலலிதா மீது வழக்கு தொடர நீதிமன்றம் அனுமதி

தமிழ் நாட்டில் கோடைக்கானலில் விதிமுறைகளுக்குப் புறம்பாக சொகுசு விடுதி ஒன்றை அமைப்பதற்கு அனுமதி அளித்ததில் ஊழல்புரிந்ததாக முன்னாள் தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா முன்னாள் உள்துறை அமைச்சர் செல்வகணபதி உட்பட ஐவர் மீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்ய போதிய ஆதாரம் இருப்பதாக ஊழல் வழக்குகளை விசாரித்து வரும் சிறப்பு நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது.

தங்கள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களில் இருந்து தம்மை விடுவிக்குமாறுகோரி அவர்கள் ஐந்து பேரும் தாக்கல் செய்திருந்த மனுக்களை நீதிபதி நிராகரித்துவிட்டார்.

செல்வி ஜெயலலிதாவும் ஏனைய நான்கு பேரும் சிறப்பு நீதிமன்றில் நேற்று நேரடியாக ஆஜரானார்கள்.

செல்வி ஜெயலலிதாவுக்கு எதிரான ஆறு ஊழல் வழக்குகளில் இந்த வழக்கே விசாரணை நிலையை அடைந்துள்ளது. எனினும் தம் மீதான ஊழல் குற்றச்சாட்டுக்களை விசாரிப்பதற்கு விசேட நீதிபதிகள் நியமிக்கப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஜெயலலிதா உயர் நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்துள்ளதால் தற்போதைய இந்த வழக்கில் சாட்சிகளை விசாரணை செய்வது தாமதமாகலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org